www.tamilarangam.net

SARVADESA TAMILER

# சர்வதேசதமிழர்

Redaktør: N.S.Pirabu, B.Sc., Dip.Jour(U.K.) Etbl.1994

Norges Tamilskblad for informasjon, kunnskap, kultur og solidaritet 1998 Vol.5 Nr.7




ன்பான சர்வதேசதமிழர் வாசகர்கட்கும் என் மதிப்புக்கும் பாசத்துக்குமுரிய ரசிகர்கட்கும்
ர் உளம்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள் ! அன்புடன் பிரசாந்த்



க்சல் நார்ஸ்ராட்



சிவராஜா



முத்தமிழ் அறிவாலய ஆசிரியர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SOSIAL- OG HELSEDEPARTEMENTET

# Fastlegeordningen på høring

Stortinget vedtok i juni 1997 å innføre en fastlegeordning i Norge. Ordningen innebærer blant annet at alle som ønsker det, skal få en fast lege å gå til.

Regjeringen har bestemt at fastlegeordningen skal innføres fra 1. januar 2000.

Du trenger ikke gjøre noe ennå. Alle innbyggere som er over 16 år og registrert i folkeregisteret, får et brev med invitasjon til å velge fastlege høsten 1999.

Du kan selvsagt velge den legen du allerede har.

**Informasjon om ordningen**
Høringsnotatet finner du på Internett:
http://odin.dep.no/shd/proj/fastlege
Har du spørsmål, kan du skrive til: Sosial- og helsedepartementet, Fastlegeprosjektet, Postboks 8011 Dep, 0030 Oslo, eller til e-postadresse: fastlege@shd.dep.telemax.no

**Høringsnotat og brosjyre**
Høringsnotatet er sendt til de berørte partene, bl.a. til alle kommunene. Høringsfristen er 31. desember 1998. Departementet har også laget en liten brosjyre om fastlegeordningen. Den kan du få på trygdekontoret, eller ved å sende inn kupongen nedenfor.

Innrykket av Statens informasjonstjeneste A-24/98

For å få brosjyren tilsendt, må du sende utfylt kupong til:
**SOSIAL- OG HELSEDEPARTEMENTET**
Biblioteket, Postboks 8011 Dep, 0030 Oslo

Lim kupongen på et postkort eller send den i en konvolutt merket "FLO"

**Jeg ønsker å få tilsendt brosjyre om fastlegeordningen,**
**bokmål** ☐ **nynorsk** ☐
Navn: ..............................................
Adresse: ..............................................
Postnummer og -sted: ..............................................

## சமூக-சுகாதார அமைச்சு

## நிரந்தரவைத்தியரை ஒழுங்குசெய்தல் பற்றிய செவிமடுப்பு

நோர்வேயில் நிரந்தரவைத்தியர்ஒழுங்கை அறிமுகம்செய்ய பாராளுமன்றம் 1997 ஆனி தீர்மானம் செய்தது.இந்த ஒழுங்கு, விரும்பும் சகலருக்கும் ஒரு நிரந்தரவைத்தியரை வைத்துக்கொள்ள வழிசெய்கிறது.
1.தை.2000 ஆண்டிலிருந்து நிரந்தரவைத்தியர்ஒழுங்குமுறை அறிமுகமாகும்,என அரசு தீர்மானித்துள்ளது.
நீங்கள் தற்போது அதுபற்றி எதுவும் செய்யவேண்டிய அவசியமில்லை. 1999 இலையுதிர் காலத்தில் 16வயதுக்கு மேற்பட்ட,மக்கள்பதிவிலுள்ள சகலகுடிமக்களும் நிரந்தரவைத்தியரை தெரிவுசெய்யும்படி அழைப்புக்கடிதம் பெறுவர்.
நீங்கள் ஏற்கனவே கொண்டுள்ள வைத்தியரை நிச்சயமாக தெரிவுசெய்யமுடியும்.

**இந்த ஒழுங்குபற்றிய தகவல்:**
செவிமடுப்புபற்றிய குறிப்பை இன்ரநெற்றில் காணலாம்.
http://odin.dep.no/shd/proj/fastlege
உங்களிடம் கேள்விகள் இருப்பின் எழுதுங்கள்:சமூக-சுகாதார அமைச்சு,நிரந்தரவைத்தியர் -செயற்றிட்டம்,த.பெ.8011 டெப், 0030 ஒஸ்லோ அல்லது மின்னஞ்சல்முகவரிக்கு எழுதுக:
fastlege@shd.dep.telemax.no

**செவிமடுப்பு குறிப்பும் துண்டுப்பிரசுரமும்**
செவிமடுப்புகுறிப்பு இதுதொடர்பானவர்கட்கு (சகல கொம்யூன்களுட்பட) அனுப்பப்பட்டுள்ளது. செவிமடுப்பு முடிவுதேதி 31 மார்கழி 1998 ஆகும்.நிரந்தரவைத்தியர்ஒழுங்கு பற்றி அமைச்சு சிறு பிரசுரம் ஒன்றையும் தயாரித்துள்ளது.இதனை காப்புறுதிகந்தோரில் பெறலாம்.அல்லது பின்வரும் கூப்பனை (நொஸ்க்கில்)நிரப்பிஅனுப்பலாம்.

பிரசுரம் பெறவிரும்பின் நிரப்பியபடிவத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்புக.
**சமூக-சுகாதார அமைச்சு**
நூலகம்,த.பெ.8011 டெப்,0030 ஒஸ்லோ

தபாலட்டையில் படிவத்தை ஒட்டி,அல்லது தபாலுறையில் இட்டு -FLO-குறியிட்டு அனுப்புக.

நிரந்தரவைத்தியர்ஒழுங்குபற்றிய பிரசுரமனுப்பவும்
புக்மோல் ☐ நிநொஸ்க் ☐
பெயர்:..............................................
முகவரி:..............................................
தபால்எண்-இடம்:..............................................


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ: தி.கிருபா, கு.பாலதாஸ் பாலேந்திரா பேர்கன்: என்.ஜெயதரன்,ம.மகான் ,சிவகாந்தன் துரொண்கைம்: தர்மா
ஸ்ரவங்கர்: அ.பாஸ்கரன்; முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்: ம.பஸ்ரியன் ஏககுண்ட்: பொன்.சிவா; துறம்சோ: கே.சிவராஜா;
வார்டோ: குகனெறியப்பன்; பேர்லவோக்:ஜ.ரிரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கிறி.சுண்ட்:தேவராஜா

# சர்வதேசதமிழர்: 1998

## ஆசிரியர் கருத்து:தொ.5, இல.7

## தமிழர்களும் கிறிஸ்தவமும்!

போத்துகீசர்,ஒல்லாந்தர்,ஆங்கிலேயர்,ஸ்பானியர்,இத்தாலியர்,பிரெஞ்சுகாரர்,அமெரிக்கர்கள் உலகைக் கட்டியாளவும்,சக மனிதர்களை அடிமைகொள்ளவும் பேராசை கொண்டு ஆசிய,ஆபிரிக்க,தென்அமெரிக்க,ஓசியானியாவில்,காலனிகளை பிடித்து,அடிமையாக்கிய போதெல்லாம் கிறிஸ்தவமிசனறி-பாதிரிமாரும் பின்னே சென்று,கிறிஸ்தவமதம் பரப்பினர். ஏழைகள்,சாதிக்கொடுமை எனும் அறியாமையால் புறக்கணிக்கப்பட்டவர்கள்,அடிமைகள், கல்விமறுக்கப்பட்டவர்கள்,வசதிவாய்ப்பை எண்ணி ஏங்கியவர்களை கிறிஸ்தவம் சட்டென அணைத்துக்கொண்டது.

காலனிவாதிகள் நிலஆசை,பொருளாசை, நிறவெறி,அதிகாரவெறியுடன் சகமனிதர்களான ஆசியர்,ஆபிரிக்கர்,செவ்விந்தியர்,பழங்குடி மக்கள்,எஸ்கிமோவர்,சாமிமக்களை நடாத்த பாதிரிமாரோ, இயற்கையுடன் ஒன்றிணைந்த உங்கள் நாகரிகம் காட்டுமிராண்டித்தனமானது!எம்முடன்சேர்ந்து மேற்குஉடை அணிந்து, மேற்குநாகரிகம்,மேற்குகல்வி கற்று,எம்மைப் போல்மாறுக! என்று கூறி பல்லக்கில் பவனி வந்தனர்.பிறமத தலங்கள் தரைமட்டமாகின. பிறமதமக்கள்,ஒளித்தே தம் சமயவழிபாட்டை மேற்கொண்டனர்.பிடிபட்டவர்கள் தண்டனைக்குள்ளானார்கள். கிறிஸ்தவபாடசாலைகளிலேயே,பிறமதசிறார்க்கு பாகுபாடுகாட்டப்பட்டது. இன்றும்கூட மேற்குநாடுகளில் மறைமுகமாக குடியேறியோருக்கு காட்டப்படும் பாகுபாடு, அடிப்படையில் நிறவாதம்,வெள்ளையர்உயர்வாதம்,மதவாதத்தை அடிப்படையாகக்கொண்டது.பொருளியல்ரீதியாக உயர்வு,அரசியலில் சமநிலை,சீரான சமுதாய தேவைகளின் ஒழுங்கமைப்பு, சட்டத்தின் ஆட்சி,பாதுகாப்பு என பல,நல்லம்சங்களை கிறிஸ்தவமேற்குலகம் கொண்டிருந்த போதிலும்,இளைஞர்களின் சமயநம்பிக்கைஇழப்பும்,தேவாலயங்களின் எரிப்பும்,மக்கள்வருகையின்றி வருமானமின்றி மூடப்படும்-பிறமதத்தவர்க்கு விற்கப்படும் தேவாலயங்களின்அதிகரிப்பும்,போதைபாவிப்பு,குடும்பமுறிவுகள்,கருச்சிதைவுகள்,லாபநோக்கம் மட்டும்கொண்ட ஆயுதவியாபாரிகளும்,பல்தேசியகம்பனிகளும்,மலிவுவிலை மூலப்பொருள் இறக்குமதியாளர்களும்,பொதுவாக மேற்குலகம் பற்றியும்,குறிப்பாக இவர்களை வழிநடத்தும் கிறிஸ்தவம் பற்றியும் கேள்வியை உண்டாக்கியுள்ளது.

நட்புறவு,இரக்கம்,மனிதசமத்துவம்,அங்கீகாரம் அன்பு,சனநாயகம்,சுதந்திரம்,மனிதஉரிமைக்கு மதிப்பு நுனிநாக்கிலிருந்தா? உள்ளத்திலிருந்தா? வருகிறது! என்பது சிலரது கேள்வி! அப்படியாயின் பிறமதபிள்ளைகள் தம் மதத்தை பாடசாலைகளில் படிப்பதை மறுப்பதும், கிறிஸ்தவமதத்தை கட்டாயமாக படிக்க சில மேற்குநாடுகள் வலியுறுத்துவது ஏன்? என்பதும் சிலரது கேள்வி!

பலவிதமான பிரிவுகள் கொண்ட கிறிஸ்தவம் ஏன் தமக்குள் முதலில் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள முடியாது? என்பதும் சிலரது வினா! கிறிஸ்தவமதத்திலும் சாதிப்பாகுபாடு போன்றவை,இந்தியா போன்ற நாடுகளில் ஏன் தொற்றிக்கொண்டது? என்பதும் சிலரது கேள்வி!

இஸ்லாமிலும் பலபிரிவுகள்(சுனி,சியா,அகமதியா),பல இஸ்லாமியநாடுகள் (ஈரான்,ஈராக்), இனங்கள்(துருக்கியர்,குர்திஷ்) மோசமாக தம்முள் சண்டையிட,சில இஸ்லாமிய நாடுகள் (சவூதி,குவைத்) தம்மவரை நம்புவதை விட அமெரிக்கா, போன்ற பணக்காரநாடுகளுடன் நட்புடன் உள்ளதும்,ஏழை முஸ்லிம்களை சுரண்டுவதும்(உ.ம்:சவூதியில் மேற்கத்தவர் பாரியகூலி பெற ஆசிய,ஆபிரிக்க முஸ்லிம்கள் பிச்சைச் சம்பளம் பெறல்),மக்களுக்குக்கு கல்வி,வசதி தருவதை விடுத்து தலைவர்கள்,தத்தம் பணப்பையை நிரப்பலும் சிலரது சிந்தனையைக் கிளறியுள்ளது.

யூதமதம்,இஸ்ரேலியர்களுக்கு பாலஸ்தீனர்களை மனிதர்களாகமதிக்க ஏன் கற்றுத்தரவில்லை?என்ற கேள்வியும்,புத்தமதம் இலங்கையில் சிங்களவர்கட்கு தமிழர்களை மனிதர்களாக மதிக்க ஏன் கற்றுத்தரவில்லை?என்ற வினாவும் உண்மையில் எழுப்பப்படவேண்டியதே!இந்துமதமும் சாதிப்பாகுபாடு,தேவையற்ற மூடக்கொள்கைகள்,மதவாதம்,பிரிவுகள்,அதிகாரவெறி போன்றவற்றை ஏன் இன்னமும் வைத்திருக்கிறது? என்பதும் சிலரது கேள்வி! இந்த முடிவுகள் தானா? மதங்கள், தத்தம் மக்களுக்கு பலநூற்றாண்டுகட்கு மேலாக ஆற்றும்,ஆற்றிய வழிகாட்டலின் பெறுபேறு?? மதங்களின் தத்துவப்புத்தகங்களை ஒருபுறம் மூடிவைத்துவிட்டு,நூற்றாண்டுகளாக உலக மக்கள் படித்த சமயபாடங்களின் பரீட்சைப் பெறுபேறு இன்று என்ன?என விஞ்ஞானரீதியாக ஆராயவேண்டிய கட்டாயம் மனிதசமூகத்துக்கு மிகஅவசியம்!எம்மதமே உயர்ந்தது, உண்மையானது,உய்விக்கவந்தது,எம்தூதரே நற் தூதர்,எம்மதத்துக்கு ஓடி வாருங்கள்! எம் கடவுளே உயர்வாளர்! என சொல்வதை விடுத்து, சமயங்கள் தம்முள்ளும், பிற மதங்களுடன்புரிந்துணர்வும்-அவைபற்றி நடுநிலையாக அறிதலும், சகலமக்களுடனும் நேசம், சமத்துவம்,நீதி,அமைதி,சமநிலை,பொறுமை நட்புகாத்தலும்,உலகமனநிறைவு,மனஅமைதி பேராசையீனம்,அதிகார-மதவெறியின்மை,ஆத்மீகமனவளர்ச்சி கருதி சகலமதங்களும் பாடுபடல் முக்கியம்! சமய ஆட்சேர்ப்பு,இகழ்வு, குழிபறிப்பு எந்த சமயத்துக்கும் அநாவசியம். உலகமக்கள் நல்வாழ்வுக்கு வளமும்,அதிகாரமும்,தொழிநுட்பமுமுள்ள கிறிஸ்தவ மேற்குலகம் பாரியஅளவில் பங்களிக்கவேண்டும்!

ஸ்கோறர்: சிவராஜா கல்வோக்: கனகசிங்கம் ,கூல்: கஜேந்திரன் ,சூர்வார்:மனோகரன்,பகீரதன் ,ஒஸ்: கிருபா கூல்:யோகராஜா
பிரிட்டன்:சோ.கனகசுந்தரம், ராஜி சந்திரன்,டாக்டர்.செ.ஆனந்தவரதன்;ந.பாலமுரளி,தவமணி.மனோகரன்.ஆறுமுகம் ,செ.நாகேந்திரன்
கனடா: கனகேஸ்வரி நடராஜா, எஸ்.திரு, ம.மகிந்தன்;நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி,வல்லிக்கண்ணன், தி.பிரசாந்த்; மைசூர்: குபுகழேந்தி பழனி: டாக்டர் இளங்கம்பன்

www.tamilarangam.net

சேலம்:இராசமாணிக்கம்திருச்சி: சிங்காரவேலன்,ஜான்ராஜ்தேவர் மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன்
கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவிராமானுசம், பாலாஜி கேரளா:சிவமணி ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம், சித்தாத்துார்:அம்பிகாபதி கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களுர்: பேராசிரியர் சி.இராமமூர்த்தி, ஆ.சி.விசுவநாதன்.

## சர்வதேசதமிழர் சந்திப்புகளம்

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் சஞ்சிகையை நல்ல முறையில் நடாத்திவரும் தங்களுக்கு வணக்கம்! நன்றி!!
சூரியன் உதிக்கும் நாடெல்லாம் வாழும்,தமிழன் தமிழ்மொழியோடு வாழவேண்டும்! என ஆசைப்படுபவர்களில் தாங்களும் ஒருவர் என அறிந்து பெருமை கொள்கிறோம். சர்வதேசதமிழர் சஞ்சிகையில் குழந்தைகட்கென பகுதியை ஒதுக்கினால் நன்றாக இருக்கும்.ஏனெனில் எல்லா வீடுகளிலும் சிறார்கள் இருப்பர்.அவர்கள் மத்தியில் தமிழ்மொழி கவரப்பட வேண்டும். ஆசையைத்துாண்டவேண்டும்.எம் சந்ததியும் தமிழை ரசிக்க வேண்டும்!என்பது எம் அவா!

**வ.சத்தியவான் - ஸ்ரொக்கோம்**

(சிறார்கட்கான ஆக்கங்கள் சிறார்கள் பெரியவர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.புகைபடங்களுடன் அனுப்புக!)

**தமிழ்த்திரு ஐயா,**

சர்வதேசதமிழர் இதழை, இலக்கிய முனிவர் வல்லிக்கண்ணன் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.இதழ்அமைப்பும் படைப்புகளும் அருமை! தமிழர்களின் புலம்பெயர்ந்த வாழ்க்கை, இலக்கியம் படம் பிடிக்கப்பட்டுள்ளது. பொன்னண்ணா கவிதை: எங்குதான் செல்வாயினி?உள்ளத்தைப்பிசைந்தது. கல்வெட்டு இதழ் அனுப்பியுள்ளேன். தங்கள் இதழுடன் மாற்றீடு செய்யவிரும்புகிறோம்.தொடர்பைபலப்படுத்துக!

**கவிஞர் முகவை முனியாண்டி,**
**அமைப்புசெயலர்-த.சிற்றிதழ்கள் சங்கம்,924ஏ,29.வீதி,பக்தவத்சலநகர்,வியாசர்பாடி,சென்னை.39**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

நோர்வே-ராணுவத்தில் பிரசாஉரிமை கிடைத்த தமிழ்இளைஞர்கள் பயிற்சிக்கு செல்லும் அனுபவம் பற்றி சக தமிழர்க்கு,எடுத்துக்கூறவிரும்புகிறேன். கோனபொஸ்சில் முதலில் பயிற்சி ஆரம்பமாகியது.புதிதாக,வந்த அனைவரும் நன்கு சேர்ந்து பழகினார்கள். அனைவரையும் குழுவாகப் பிரித்து வைத்திய பரிசோதனை செய்தனர். மறுநாள் இராணுவஉடைகள் வழங்கப்பட்டு,எப்படி ஒழுங்காக,துப்பரவாக எம்மையும்,அறையையும் வைத்திருப்பது என அறிவுரை தந்தனர்.எனது அறையில் 5நோர்வேஜியர்களும் கூட இருந்தனர்.ஒருவருக்கொருவர் உதவியாய் இருந்தோம்.எமக்கு 3அதிகாரிகள் பொறுப்பாகவிருந்து பயிற்சிகளை நன்றாகவிளங்கப்படுத்தினர்.அறையை-எம்மை எப்படி துப்பரவாகவைத்துள்ளோம்? என அவதானித்தனர்.
ஆயுதங்கள் பழுதுபார்ப்பு,நுட்பம் பற்றிப்படிக்க எனதுவிருப்பை தெரியப்படுத்தியதும்,எனக்கு அனுமதிதந்தனர். காலை 8.30- மாலை 16.00 வரை வகுப்புகள் நடந்தன. மாலையில் சாப்பாடாக,மீனும்,உருளைக்கிழங்கும் அதிகமாக வழங்கப்படும்.3மாதபயிற்சி இங்கு முடிந்ததும்,ஒஸ்லோவிலுள்ள அரசமாளிகை பாதுகாப்பு பிரிவில், 9-மாதபயிற்சி உண்டு. ஆயுதங்கள் திருத்தும்பிரிவில் பயிற்சிபெறுகிறேன்.

**சுரேஷ் சௌந்தரநாதன், நோர்வே**

**பேரன்புக்குரிய சகோதரருக்கு,**

பலத்தஇன்னல்களின் மத்தியில் சர்வ தேச தமிழரை வெளியீடு செய்வது பாராட்டுக்குரியது.அலைகடலுக்கப்பால் இடம்பெயர்ந்துவாழும் தமிழர்கள் தமிழையும்,கலை,கலாசார பண்பாடுகளையும் மறக்கவில்லை!என்பதனை இதுபோன்ற சஞ்சிகைகளே எமக்கு உணர்த்தி வருகின்றன.நோர்வேயிலிருந்து,சர்வதேசதமிழர்,வருவதையிட்டு உலகத் தமிழ்ச்சமூகமே பெருமை அடைகிறது.வாழ்க!வளர்க!!

**வி.காந்தகுமார்-களுவாஞ்சிகுடி**

**அன்புடையீர்,**

உலகெங்கும் வாழும் தமிழர்களின் முன்னேற்றம்,ஐக்கியம் கருதி வெளிவரும் சர்வதேசதமிழர் சஞ்சிகைக்கு எமது வாழ்த்துக்கள்!



பி.பி.சி.தமிழோசை மூலமும் தமிழர் செய்திகளை ஆர்வத்துடன் கேட்போம். உலகத்தமிழர்நலன்கருதி வெளிவரும் இம்முயற்சி வெற்றிபெற வாழ்த்துகள்!

**ஜே.ஸ்ரீதரன் - சவூதி அராபியா**

**அன்பு ஆசிரியநண்ப,**

யூதர்கள் உலகம் முழுவதும் பரவினாலும் தம் மதம்,மொழி,பண்பாடு காத்தனர்.ஒருவருக்கொருவர் உதவினர்.இவர்கள் பொருளாதாரசீரமைப்பு மற்றவர்களை கவர்ந்தது.வெள்ளையர்களே இவர்களிடம் கடன்பெற்றனர்.
நிதி,கல்வி,ராணுவவலிமை,அரசியல் செல்வாக்கால் 1948ல் இஸ்ரேலை தாபித்தனர்.பல யூதர் அங்கு சென்று குடியேறினர்.பாலைவனத்தில்,சோலைவனத்தை,உருவாக்கினர்.தமிழர் பலர் வறுமையில் வாட,பண வசதியுள்ள சிலர் தலைகால் புரியாது ஊதாரித்தனமாக செலவிடுகின்றனர்.பிள்ளைகட்கு இளமையிலேயே சிக்கனம் பழக்குவதில்லை.ஆடம்பரவிழாக்கள் செய்வதிலும்,தேவையற்றபொருட்கள் வாங்குவதிலும் கோயில்களிலும்,படாடோபம் காட்டுவதிலும் பொருளாதாரத்தை இழக்கிறார்கள்.தமிழ்பெண்கள் நகைகளிலும்,சேலைகளிலும் முதலீடு செய்வதை விடுத்து தொழில், வணிகம் தொடங்க ஆர்வம் காட்டுக! செக்குமாடுகள் போல் ஒரேபாதையில் சுற்றுவதைவிடுத்து,புதிதாக சிந்திக்கவேண்டும்.பழையகோவில்களை காப்போம்.கோவிலில்லா நாட்டில் மட்டும் புதிய,எளிமையான கோவில் ஒன்றை கட்டலாம்.ஒற்றுமை,முன்னேற்றம் சகலதுறையிலும் மின்னட்டும்!

**வீர.மதுரகவி-புதுச்சேரியின்குரல்**

**பேரன்புடையீர்,**

வணக்கம் பல.அவ்விடம் நலமே விளைக! தமிழ்மொழியின் பண்டைய இலக்கியங்களை கூர்ந்துநோக்கியபடி நூல்வடிவம் அமைப்பதற்கான பொருள் என் வசம் உள்ளது. ஆனால் நூால் பதிப்பிக்கும் பொருளாதாரச்சுமை காரணமாக துாங்கிக்கிடக்கிறது. நூால் வெளியிடுவதற்கு ஆன பொருட்செலவை எடுக்கவுள்ள நல்ல இதயங்களை தொடர்புகொள்ள விரும்புகிறேன்.அயல்நாட்டுத்தமிழர் முயற்சியால் என்நூால் வெளியானால் பெருமை தமிழுக்கன்றோ!

**டாக்டர் லோகாம்பாள் சுந்தரம்**
**தமிழ்துறை,அரசகலைக்கல்லூரி**
**திருவனந்தபுரம்-கேரள மாநிலம்**

**அன்பார்ந்த ஐயா,**

நாட்டின் யதார்த்த சூழ்நிலையால் என் தந்தையார் டாக்டர் வே.தவயோகநாதன் தமிழ்அரசியல் கைதியாக கடந்த 44மாதங்களாக களுத்துறை சிறையில்,தடுத்துவைக்கப்பட்டிருந்தார் 18.07.98ல் விடுதலையானார்.
இலக்கியமுயற்சிகளில் பின்னிடைவு இதனால் எமக்கு ஏற்பட்டது.
தமிழ்சிறார்கட்கென சிந்தனைச்சிறுவர் அமைப்பு 5ஆண்டுகட்கு முன் மாத்தளை இந்துக்கல்லூரி சிறார்களாகிய எம்மால் ஆரம்பிக்கப்பட்டது.மலையகம்,அகிலஇலங்கையிலும் இந்த இலக்கியஅமைப்பு வளர்ச்சியுற்றுள்ளது. சிந்தனைச்சிறகு எனும் காலாண்டு சஞ்சிகையையும் நாம் வெளியிட்டு வருகிறோம்.அனைத்துலகதமிழ்சிறார்களை இணைத்து புதிய தமிழ்இளம் சந்ததியை உருவாக்க விரும்புகிறோம். எமது அறிவு,அனுபவம்,கஷ்ட துன்பங்களை பகிர்ந்து திறன்மிக்க சமுதாயத்தை அறிவியல்,ஆன்மிக, இலக்கிய,விஞ்ஞான-தொழிநுட்பதுறையில் உருவாக்க முயல்கிறோம். பெற்றோர்களின் அன்பு,ஆதரவு,அறிவுரை,ஆலோசனை,வழிநடத்தும்திறன், பொருளாதாரஉதவி எமக்குத்தேவை!

**உலகத்தமிழர்களே!உதவுங்கள்**
**மாத்தளை தவ.சஜிதரன் ,**
**சிந்தனைச்சிறுவர் அமைப்பு**
**18-3இஸ்மாயில்.லேன்,மாத்தளை**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேச தமிழர் பற்றி அறிந்து ஆர்வம் கொண்டேன்.தயவுசெய்து சர்வ தேச தமிழர் சஞ்சிகை பிரதி ஒன்று அனுப்பி அறிமுகம் செய்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

**கனேஸ் கே.பிள்ளை, கனடா**

**அன்பார்ந்த ஆசிரியருக்கு,**

சர்வதேச தமிழர் சஞ்சிகையை நண்பர்கள் மூலம் அறிந்து,வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது.மிகவும் சுவைமிக்க நூால்!சர்வதேச தமிழரை தொடர்ந்து பெற விரும்புகிறேன்.நான் ஒரு வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்! என் ஆக்கங்களை அனுப்பிவைக்கிறேன். கடவுள் சகலரையும் நேசிக்கிறார்!

**ஜி.தெரேஸ் அஞ்சலா-கொழும்பு**

**அன்புள்ள ஐயா,**

விஜயலட்சுமி சிவாவை சிறப்பாசிரியராகக்கொண்டு வந்த ஓவியசிறப்பிதழ் அபாரம்!அவரதுகதை,கவிதை,நன்று!

**மதுமாரி - திருகோணமலை**

கோப்ன: புருசோத்தமராஜன் பாரும்: மு.கணேசராஜா ,சுந்தரலிங்கம் அஸ்கர்: சிவராஜா நேதனஸ்:எலிஸ்ரன் நூார்பியுறெய்ட்: சுமதி ட்றம்மன்: மு.மணிவண்ணன் ரொன்ஸ்பேக்: சி.மணி ஸ்திறின்:சர்வேந்திரன் புஸ்பா பிறை: தெ.வீரகத்தி அல்தா: பி.மகேஸ்வரன் பாட்ன்ஸ்பியுறோறா:ரவீந்திராதேவி ஸ்கொட்ஜ:கி.கலாநிதி ஒலகண்ட்:திரு.பொன்னுதுரை பிறட்றிக்ஸ்ராட்: பென்சமின் ராஜா பிலிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## லண்டன்தமிழர் மனோகரனுடன் ஒரு கருத்தான பேட்டி!

இலங்கையில் 1983ல் ஏற்பட்ட தமிழர் இன அழிப்பு கலவரத்துக்குப்பின் பல தமிழர்கள் லண்டன் சென்று தஞ்சம்புகுந்தனர்.
அதற்கு முன்பே சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் காலத்திலிருந்தே உயர்கல்வி பெற என இலங்கையிலிருந்து பல தமிழர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலிருந்தே சென்றுள்ளார்கள். லண்டனிலுள்ள சிரேஷ்டதமிழர்கள் பல்வேறுவிதமான கால கட்டங்களையும் நேரில் கண்டவர்கள்!எனும் வகையில் 1963ல் உயர்கல்விபெறச்சென்று, இன்று போர்ட் கார் நிறுவனத்தில் அதிகாரியாகப்பணிபுரியும்,திரு.மனோகரன்,அவர்களை அவர் தம் துணைவியார் தவமணி,அருமைப் புதல்வியர் அனுஜா,மைதினி ஆகியோருடன் நோர்வே வந்தபோது கண்ட பேட்டி இதோ:

கேள்வி:அன்றும் இன்றும் லண்டன் வாழ்வில் வேறுபாடுகள் என்ன கண்டீர்கள்?
பதில்: முற்றுமுழுதான மாற்றம் என்றே கூறலாம்.இன்று நவீனகட்டிடங்கள்,பல,லண்டனை நிறைத்துள்ளன.முன்பு ஞாயிறு அமைதியான நாள்!தேவாலயமணிகள் மட்டுமே கேட்கும். இன்று ஞாயிறுகளில் கடைகளும் திறக்க ஆரம்பித்துள்ளதால் பிசியான நாட்களாகவே எல்லாம் இருக்கின்றன.அன்று வாழ்க்கைச் செலவு, மிக மிகக்குறைவு! ஒரு பவுண் இருந்தால் ஒரு குடும்பம்,ஒருநாள் தாராளமாக உண்டு,குடித்து மகிழப் போதுமானது. இன்று பணத்தின்பெறுமதி 1964லுடன் ஒப்பிடுகையில்10மடங்கு வீழ்ச்சி எனலாம்.அதே போல் அன்று தனிநபர் சராசரிவருடவருமானமும்,சுமார் 3000பவுண்கள் எனலாம்.இன்று சம்பளம் கூட,விலைவாசியோ அதற்குமேல்! 1964ல் முதன்முதலாக தொழில்கட்சி ஆட்சிக்கு வந்த போது பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள்.1965ல் பணமதிப்பை அரசு குறைத்துக்கொண்டது.
1970களில் அருமையான வாழ்க்கைக்காலம் எனலாம்.எல்லோரும் சந்தோசமாக இருந்தார்கள்.நல்லகாசும் உழைத்தார்கள்.வேலை இருந்தது. தெருவில்,அயலில்,நகரில் வன்முறை,குற்றச்செயல்கள் இல்லை.
1978ல் பொருளாதாரமந்த நிலை ஏற்பட்டது. தற்போது வேலையின்மைகூடி 1மிலியனுக்கு மேற்பட்டவர்கள் வேலையின்றியுள்ளனர்.

கேள்வி: காலத்துக்கு காலம் குடியேற்றமும் ஆசியா,ஆபிரிக்கா,கரிபியனிலிருந்து இடம்பெற்றுள்ளது. அது பற்றி....?
பதில்:பிரிட்டிஷ் காலனி நாடுகளிலிருந்தே பலர் பிரிட்டன் வந்தார்கள்.1962-63ல் மேற்கிந்தியதீவுகளிலிருந்து ஆசிரியராக,சாரதியாக, தொழிலாளராக வேலைஅனுமதியுடன் பலர் வந்தேறினர்.உகாண்டாவிலிருந்து இடிஅமின் துரத்தியடித்த இந்தியர்கள்(குஜராத்திகள்) 72-73ல் குடியேறி வர்த்தகத்துறையில் கொடிகட்டிப்பறக்கிறார்கள்.சட்டவிரோதமாயும் பலர் சரக்குவாகனங்களில் ஒளித்துவந்து குடியேறி காலப்போக்கில் மன்னிப்புஅனுமதி பெற்றனர். ஹொங்கொங்கிலிருந்தும் பலர் விசாபெற்றுக் குடியேறினர்.1983க்குப்பின் இலங்கைத்தமிழர்கள் தஞ்சம்கோரி குடியேறினர்.2-3 வேலை செய்து கஷ்டப்பட்டுழைத்து,ஊருக்கும் பணம் அனுப்பினர்.பெற்றோல்நிலையம்,கடைகள்,உணவுவிடுதிகள் பல திறந்து கடும்உழைப்பு, சேமிப்பால் பெரும்சாதனை படைத்தனர். யூதர்கள்,இந்தியர்,தமிழர்கள் முன்னேறியுளர்.

கே: இனதுவேசம்,பாகுபாடு,வெறுப்பு பற்றி?
ப:பாகுபாடு,இனதுவேசம்,தாக்குதல்கள்,வெறுப்புணர்வு இருந்தாலும் அரசு பலமாக அத்தகைய முயற்சிகளை அடக்கிவிடுவதால் இலங்கைபோல் இனக்கலவரம் வரவாய்ப்பில்லை 1963,80ல் நியோநாஜிகலவரங்கள் நடந்தன. நாஜி எதிர்ப்புகட்சியும் முனைப்பாகவுள்ளது. துவேச உணர்வுள்ள தேசிய முன்னணி பலம்பெறாதெனவே எண்ணுகிறேன்.பிரதமர் ரோனி பிளயர் அகதிகள்,சிறுபான்மையருடன் அனுதாபமாகவே நடப்பார்!என நம்பலாம்.

கே:லண்டன் போக்குவரத்துநெருக்கடி பற்றி?
ப:1964ல் லண்டன் வாகனநெருக்கடியை விட இன்று பலமடங்கு கூட.முன்பு மன்செஸ்ரரை விரைவில் செல்லலாம்.இன்று பலமணிநேரம் வாகனநெருக்கடியால் ஆகிறது. சூழல்மாசுபடலும் வாகனபுகையால் அதிகம்.சுவாசநோய்களும் அதனால் கூட!அரசு சூழல்மாசடைதலுக்கு எதிராக பல சட்டம் போட்டுள்ளது. தேம்ஸ்நதியில் இரசாயனகழிவுகளால் மீன்கள் இறப்பும் கூடியுள்ளது. காசுக்கார வெள்ளையர் லண்டனுக்கு வெளியே கிராமப்புறங்களில் தான் சீவிக்கிறார்கள்

கேள்வி: அன்றைய இசைத்துறை பற்றி...?
பதில்: பீட்டில்ஸ், கிளிவ் றிச்சாட்,எல்விஸ் போன்றோர்களின் காலமது! இளவட்டங்கள் பீட்டில்ஸ் மேனியாக்(பைத்தியம்)காகவே அலைந்தார்கள். 1970களில் றோலிங் ஸ்ரோன் பிரபல்யம் அடையத்தொடங்கினர். இன்று ஸ்பைஸ்கேள்ஸ் போல்,பலகுழுஉளர்.

அமெரிக்கா,கனடா,ஐரோப்பா என பலநாடுகட்கும் குடும்பத்துடன் பிரயாணம்செய்த இவர் துணைவியார் கலைப்பட்டதாரி,தமிழில்பெரும் புலமைபெற்றவர்!வருமானவரிஅதிகாரியாகப் பணிபுரிகிறார்.பிள்ளைகள் வயலின், வாய்ப்பாட்டில்,கல்வியில் திறமைமிக்கவர்களாவர்!

க.கு.கருப்பையா புதுக்கோட்டை: எஸ்.விஜயகுமார் செய்யாறு: வி.பாலு வேலூர்: சாம் டேவிட் கோவை: பூ.வே.தமிழன்பன்
ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா / அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன் ;ஜித்தா: எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்

www.tamilarangam.net

சுவீடன்: வ.சத்தியவான்; ஜேர்மனி: த.புவனேந்திரன்: 02304 82811நெதர்லாந்த்: ஈசன் டென்மார்க்: பாரதி பாலன் ,வேலணை பொன்னண்ணா, ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்,வர்ண.இளஞ்செழியன்,விதுரன்; சுகந்தி தில்லையம்பலம் குருநாகல்: எஸ்.ரமேஷ்

## கொழும்பிலிருந்து யாழ்.வரை..!

## நோர்வேதமிழரின் அனுபவம்..!!

யாழ்ப்பாண புகையிரதநிலையத்தில் லயன் ஏயார் ஊழியர்களும்,போலீஸ்,இராணுவம் எல்லோரும் நிற்கிறார்கள். முதலில் லயன் ஏயார் ஊழியர்கள் கூப்பிட்டு,வரிசையில் நின்று ரிக்கட்டை சோதித்துவிடுவார்கள். இராணுவம்,போலீஸ் எங்கள் அடையாளஅட்டைகளை மாற்றிமாற்றி சோதனையிடுவர். அதன்பின் அவர்களே உடம்பில் இருந்து, சகலபொருட்களையும் சோதனையிடுவர். எல்லாம் முதலிலேயே கொட்டி அவர்களே சோதித்தும்,மீண்டும் மீண்டும் சோதிப்பது ஏன் என்றுதான் புரியவில்லை.கொஞ்சமாவது அதில் புத்திசாலித்தனம் இருப்பதாக தெரியவில்லை.

சாமான்களையும்,எங்களையும் சோதனையிட்டபின் பஸ்வண்டியில் ஏற்றி பலாலிவிமான நிலையத்துக்கருகில் காட்டுப்பாதையால் கொண்டுபோய்ச்சேர்ப்பார்கள். விமானத்துக்கு பலநிமிடங்கள் நடந்தே போகவேண்டும். வெயிலோ கடுமையாக இருந்தது. அங்கு இங்கு திரும்பமுடியாதபடி படையினர் பாதையெங்கும் காவல்! தேவையற்ற காவல்!! ஒரு மாதிரியாக ரஷ்யவிமானமான லயன் ஏயாரில் ஏறி அமர்ந்தோம்.
பழையவிமானங்களை ரஷ்யா,உக்ரேய்ன் போன்ற நாடுகளிடமிருந்து வாங்கியதால் அவை, பழைய பஸ் வண்டிகளை விடக் கேவலம்!
(அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட விமானம் பயணிகளுடன் கடலுள் வீழ்ந்த அவலமும்,துன்பமுமான செய்தி வாசகர்கட்கு அறிந்தவிடயமாகும்.)
அவை எவ்வளவு தூரம் பாதுகாப்பற்றவை என அறிந்தும்,அவற்றைப்பாவிப்பது சிங்கள அரசின் பொறுப்பீனத்தையே காட்டுகிறது.

இந்தியன் ஏர்லைன்ஸ்,ஏர்லங்காவை திருச்சி, சென்னையிலிருந்தும்,யாழ்.செல்ல அனுமதிக்கலாம் தானே!அப்படி செய்தால் வெளிநாட்டிலிருந்து வரும் தமிழர் தம் பெற்றார் உறவினரை கண்டு களித்து, மனம்ஆறிப் போகமுடியும் தானே! அறியாமை,பொறாமை,வெறுப்பு,சர்வாதிகாரத்தனம்,பயம்,சிறுமைகுள்ள நரித்தனம் எப்போதும் கொண்ட கொடிய சிங்கள அரசு எப்போது மனம் திருந்தும்? என்பது தான் இறைவனிடம் எமது முக்கியமான கேள்வி! பிரபாகரனின் மொழி தான் இவர்கட்கு புரியும்!!போல் தெரிகிறது. தமிழர்மனங்களை வெல்வோம்! என வாயால் மட்டும் பிதற்றும் பித்தர்கட்கு எப்படி வெல்வது என புரியாமல் உள்ளதே. தமிழர் தம் அலுவலைக் கவனிக்க நீங்கள் உங்கள் பாட்டை கவனியுங்கள்!இது தான் இலங்கையில் நீதி,அமைதி உண்டாக ஒரே வழி என்று ஏன் புரியவில்லை? ஒருவர் விடயத்தில் ஒருவர் தலையிடாமல்,நட்பாக வாழமுடியும்! என்ற சின்ன தத்துவம் ஏன் தான் அவர்களுக்கு இன்னும் புரியவில்லை.

தமிழர் பிரச்சனை சிங்களவர் தமக்கு தாமாக பூட்டிக்கொண்ட விலங்கு!தமக்கும் கஷ்டம்உண்டாக்கி தமிழர்க்கும் சொல்லொணாத கஷ்டம் தந்த சிங்களஅரசுகள் படிப்பது எப்போது என்பதுதான் முக்கியகேள்வி?

இப்படி பலகஷ்டங்களைத் தாண்டி ஒருவாறு கொழும்பை அடைந்தோம்.சோதனைச்சாவடிகளில்,சிலஇராணுவஅதிகாரிகள் பொதிகளை வடிவாக சோதனைசெய்யும்படி கூறியபோதும் சிலஆயுதப்படையினர்,அப்படிச்செய்யவில்லை சிலர் மோலோட்டமாக பார்த்துவிட்டு தலை அசைத்தார்கள். அவர்களும் தான் எவ்வளவு என்று திருப்பி திருப்பி சோதனையிடுவது?

இலங்கை சென்ற நாம் உயிருடன் தப்பிவந்தாலும்,எம் நாடு இந்த சிக்கலில் இருந்து எப்போது தப்பும்?என்ற கேள்விமட்டும் மனத்தைக்குடைந்துகொண்டே இருந்தது.

சந்திரிகாவுக்கு கடவுள் நல்ல புத்தியை கொடுத்து,புலிகளுடன் பேசி ஒரு சுமுகமான அரசியல்தீர்வுக்கு வரவேண்டும்.அது தவறினால் சகல உலகத்தமிழர்களும் புரிந்துணர்வுடன் ஒற்றுமைப்பட்டு,ஈழத்தமிழர்களையும், தமிழ்ஈழத்தையும், காப்பாற்றஉதவவேண்டும்.

தமிழர் ஒருவரை ஒருவர் மனித உரிமையில் மதிப்பதும்,சனநாயகரீதியில் அங்கீகரிப்பதும், தமிழர்ஒற்றுமையுடன் எமக்கொரு நாட்டை உருவாக்கி, இனஅழிப்பிலிருந்து விடுதலை பெறவும் பாடுபடுவதைவிட எமக்கு வேறுவழி இருப்பதாகத் தெரியவில்லை.

அதனால் தான் நோர்வேயிலிருந்து யாழ்ப்பாணம் சென்று அவ்வளவு கஷ்டப்பட்ட எனது அனுபவத்தை உலகத்தமிழர்கட்கு சர்வதேச தமிழர் மூலம் முன்வைக்க எண்ணினேன்.

உலகெங்குமிருந்து வந்த வாசகர்கடிதங்கள் இந்தக்கட்டுரையின் தாக்கத்தை உணர்த்துவதாயும்,உலகத்தமிழர் ஈழத்தமிழர் பிரச்சனையில் மிகமிக அக்கறையுடன் கவனிப்பதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

தமிழ்பேசும் சகல மக்களும்,தமிழ்நாடு, பிறமாநிலங்கள்,இந்தியமத்தியஅரசு,பிறநாட்டு அரசுகள்,மக்களின் தார்மீகஆதரவுகளையும் அனுதாபத்தையும் பெற்று ஈழத்தமிழர்க்கு நீதியும்,அமைதியும்கொண்ட நல்ல வளமான எதிர்காலத்தை அமைத்துத்தரும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**-பேர்கன்வாசி,நோர்வே**

யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; களுவாஞ்சிக்குடி: விகாந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன் திருகோணமலை: மதுமாரி ,தாமரைத்தீவான் கண்டி: எஸ் மயில்வேந்த ன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை; குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்: ம.மனோகரன்அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா: பவளம்.ப.த்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவைப்பெறுவது சுலபமா....!

வெ.தேவராஜுலு
பினாங்கு

நிறைய புத்தகங்களைப் படிப்பவர்களுக்கு கடினமான பிரச்னைகளுக்கு ந்த விடைகளைக் கண்டுபிடிக்கும் றமை வந்துவிடுகிறது. அப்படிப்பட்டர்களைத் தேடி பதவியும் பொருளும் வரும். அறிவுள்ளவனை அனைவரும் தித்து அவனிடம் மரியாதையாகப் பழகுர்கள் (பி.எஸ். ராவ்)

அறிவற்ற மனிதனை, உலகத்தில் ருவனும் மதிப்பதில்லை. அறிவுள்ள னிதனையே உலகம் தேடிக் கொண் ருக்கிறது. அறிவில்லாத மனிதர்கள் லகத்திலே நல்வாழ்க்கை வாழ்வதற் ாகப் போராடிக் கொண்டிருக்கிறார் ள். அறிவுள்ள மனிதன் தன் வாழ்க் கயை திட்டமிட்டு அமைத்து வெற்றி பறுகிறான். நவீனமயமாக்கப்பட்டு ட்ட இந்த உலகத்தில் கட்டாயம் றிவாற்றல் முக்கியம்!

அறிவு இருக்குமிடத்தில் திறமை ந்துவிடுகிறது. திறமை இருக்குமிடத் ல் பொருளும், பதவியும் புகழும் வந்து டிகொள்கின்றன. அப்படிப்பட்டவன் ம்பிக்கையுடன் செயல்படுகிறான். றிவும் திறமையும் நம்பிக்கையும் ருக்கும் உள்ளத்தில் தாழ்வு மனப் ான்மைக்கு இடமில்லை என்கிறார் எஸ். ராவ்.

எப்படியாவது அறிவைப் பெற்றுக் காள்வது நம்முடைய கடமை! அறிவைப் பற்றுக்கொள்வது எப்படி?

**பள்ளிக்கூடத்தில் படிக்க ற்றுக்கொள்கிறோம். எழுத்தறிவு ருகிறது.**

**தொழில் கல்வியிலும், மற்ற ர்களிடமிருந்தும் தொழில் அறிவை பெற்றுக் காள்கிறோம்.**



**வாழ்க்கை முறை ளை, நாம் எப்படிப் ட்டவர்களோடு ாழ்கிறோமோ, அப் டியே வாழ்க்கை றைகளை கற்றுக் காள்கிறோம்; மற்றும் தற்காலத் ல் வானொலி, தொலைக்காட்சி ழி கேட்டும், பார்த்தும் ஓரள க்கு அறிவைப் பெறமுடிகிறது.**

இப்படிப் பல வழிகளில் அறிவைப் பற்றுக்கொண்டாலும், நாம் நல்ல த்தகங்களை வாசிப்பதன்வழி சிறந்த னுபவ அறிவை பெற்றுக் கொள் றோம்.

புத்தக வாசிப்பு மனிதனை முழுமைப் டுத்துகிறது. எனக்கு ஆங்கிலம் படித்துக் காடுத்த (லௌரி ஞாபகார்த்த கல்லூரி, பங்களூர்) ஆசிரியை, திருமதி. கமலா ஜகதீசன் அவர்கள், "நல்வழி" இதழில் ாசிப்பின் முக்கியத்துவத்தை எழுதும் பாது ஒரு கதையும் அதில் கூறியிருந் ார்.

நள்ளிரவு நேரம் எங்கணும் கும் ருட்டு! இரண்டு குதிரை வீரர்கள் திரை மீதேறி சவாரி செய்தவர்களாய் ரு காய்ந்த ஆற்றுப்படுகைக்கு அருகில் வந்து கொண்டிருந்தனர். "நில்லுங்கள்" என்று ஒரு குரல் கட்டளையிட்டது. வீரர்கள் குதிரையை கட்டுப்படுத்தி நிறுத்தினர். மறுபடியும் அதே குரல் அவர்களை நோக்கி "ஆற்றுப் படுகையினின்று ஒரு கை நிறைய கற்களை எடுத்து பையில் போடுங்கள். கதிரவனின் முதல் ஒளிக் கதிர்கள் உங்கள்மீது படியும்போது கற்களை எடுத்துப் பாருங்கள். நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். ஆனால் அதே சமயத்தில் துக்கமுமடைவீர்கள்" என்று கூறியது. குரலின் கூற்றுப்படியே செய்து முடித்த வீரர்கள் மறுபடியும் குதிரை மீது ஏறி மௌனமாகப் பிரயாணம் செய்தனர்.

காலைக் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் - இவ்வீரர்களின் முகங்களை பிரகாசிப்பித்தன. அவசரமாகக் கையைப் பையில் போட்டு கற்களை எடுத்துப் பார்த்தனர். மகிழ்ச்சியால் அவர்களுடைய உள்ளங்கள் துள்ளின. கண்கள் பளபளத்தன! ஆனரல் அதே சமயத்தில் துக்கமும் அவர்களது முகங்களில் படியலாயிற்று. ஏன் இப்படி? மகிழ்ச்சியும் துக்கமும் ஒரே நேரத்திலா? ஆம், அதற்கும் காரணம் உண்டு. பையில் போடப்பட்ட கற்கள் அனைத்தும் விலையுயர்ந்த வைரங்கள் ஆகும். வைரக்கற்களைக் கண்ட மாத்திரத்தில் உள்ளங்கள் மகிழ்ச்சியால் துள்ளின. "ஐயோ, இன்னும் சற்று அதிகமாக எடுத்திருந்தோமானால்..." என்று எண்ணிய மாத்திரத்தில் சோகம் இதயங்களைக் கவ்வியது.

உலகத்திலே விஷயமறிந்து - வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு, நல்ல சிறந்த புத்தக வாசிப்பும், உழைப்பும் இருந்தாலே முன்னேறுவதற்கு அவை படிகளாக அமைந்துவிடும்.

நல்ல நூல்களைப் பொறுக்கியெடுத்து வாசிக்கும்போது வைரக்கற்களைப் பெற்ற குதிரை வீரனைப் போன்றே மகிழ்ச்சியடைகிறோம். இன்னும் சில மணி நேரங்களைப் பயன்படுத்தி நல்ல நூல்களை வாசித்திருப்போமானால் இன்னும் சற்று அதிகமாக, அறிவைப் பெருக்கி இருக்கலாமே என வேதனை அடைவோம் அல்லவா?

இன்று எப்படிப்பட்ட புத்தகங்களை வாசிக்கிறோம்?

மலேசியாவில் வாசிக்கும் பழக்கம் அதிகரித்திருக்கிறது என்ற செய்தி ஆரோக்கியமான அறிவு வளர்ச்சியை காண்பிக்கவே செய்கிறது. அறிவு சம்பந்தப்பட்ட புத்தகங்கள், சினிமா புத்தகங்கள், மஞ்சள் செய்தி, செக்ஸ் புத்தகங்கள் என்றெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தாலும்கூட, மலேசியத் தமிழர்களுக்கு அறிவுப் பசி ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த உலகத்தில் ஒவ் வொரு நாளும் நமக்கு கிடைத்து இருக்கிற இருபத்து நான்கு மணி நேரம் தங்கத்தைவிட விலை உயர்ந்தது. அதிலேதான் ஒரு பகுதி நேரத்தை வாசிப்பதற்காக ஒதுக்கு கிறோம். அப்படி ஒதுக்கப்பட்ட நேரத்தில் எப்படிப்பட்ட புத்தகங்களை வாசிக்கிறோம் என்பது முக்கிய மான விஷயம் அல்லவா? எப்படிப்பட்ட அறிவுப்பசி என்பது கேள்வியல்லவா? சினிமா ஏடுகள், வாழ்க்கைக்கு உயர்வைக் கொண்டு வராத புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிப்பதனால் அற்ப சந்தோஷம் உண்டானாலும், அவற்றை வாசிப்பதன் மூலம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். இந்த அவசர மான உலகத்தில் அற்ப சந்தோஷங்களும் அவசியந்தான் என்று சொல்பவர்களுக்கு நாம் புத்தி சொல்ல முடியாது. முன்னேற்றத்தை எதிர்நோக்கிச் செல்பவனுக்கு ஒவ்வொரு நிமிடமும் பணம் என்றும், மகிழ்ச்சியான வாழ்க்கை என்றும் நினைக்கிறான். சினிமா பத்திரிகைகளும், மனிதனின் மனதிலே மிக மிக மெதுவாக நஞ்சையே ஊற்றுகிறது என்று சொல்லலாம். அவை ஒரு வேளை புதிய நாகரிகங்களை கற்றுத் தருகிறது என்று சிலர் நினைத்தாலும், நேரத்தை விரயம் செய்து மனதையும் பாழாக்குகிறது. கொலைகள், கொள்ளைகள், ஒழுக்க மற்ற ஆபாசச் செயல்கள், பாலியலுக்கு முரண்பாடான - சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாத உறவு முறைகள் போன்றவற்றை இரகசியமாக ஊக்குவித்து மனித சமுதாயத்தைக் கெடுத்து குட்டிச்சுவராக்கிப் போடுவதோடு, குற்றவாளிகள் பெருக உதவி செய்கிறது. அப்படிப்பட்ட எந்த புத்தகத்தையும் பத்திரிகையையும் வாங்குவது, வாசிப்பது பாவமான செயல் மட்டுமல்ல; நாட்டுக்கு - நமது வாழ்க்கைக்கு நாமே செய்துகொள்ளும் துரோகச் செயல் ஆகும். நம்மிடம் இருக்கிற ஒவ்வொரு காசும் நம்மீதுள்ள மரியாதையை அலங்கரிக்கிறது. அதை சரியானபடி உபயோகிக்காதபோது, நாம் அந்த மரியாதையை இழந்து போகிறோம்.

நம்முடைய வாழ்க்கையை செப்பனிடும் அறிவியல் புத்தகங்களுக்கே செலவிட வேண்டும். அவை நம்முடைய உள்ளத்தில் உயரிய இலட்சியங்களையும் நோக்கங்களையும் உருவாக்குகின்றன. மன உரத்தை பெருக்கி, மனோ சக்திகளை ஆற்றலுடன் விழிப்படையச் செய்கின்றன. செயல்திறன் கொண்ட சிந்தனைக்கு வழிவகுக்கின்றன. மனம் தூய எண்ணங்களின் பிறப்பிடமாக, வடிகாலாக மாறுகின்றது. ஆழமான அரிய கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளும் சக்தியை பெற்றுக் கொள்கிறது. சிந்தனையின் பிறப்பிடம் ஒரு சிறப்பிடமாக மாறுகிறது என்று என் ஆசிரியை அழுத்தமாக குறிப் பிடுகின்றார்.

வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வோமாக. நமது பிள்ளைகளுக்கும் வயதுக்கேற்ப நல்ல புத்தகங்களை வாசிக்கப் பழக்கு வோம். அறிவினால் நிரம்பி ஆற்றல் மிக்க சமுதாயத்தை உருவாக்கி உயர்வோம்.— உயர்வோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானப்பிரகாசம் தென்கொரியா :ஏ.யு.எல்.ஏ.ஷில்பி பிஜி: ச.சச்சிதானந்தம் தென்ஆபிரிக்கா: செல்வன்பிள்ளை பொற்ஸ்வானா:
கமலா.வேலுப்பிள்ளை புருணை: கிருஷ்ணராஜா யப்பான்: டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்: கிருஷ்ணன் மலேசியா:
க.மாணிக்கவாசகர், க.கணேசன் ,அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்:
யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு:நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

## சர்வதேசதமிழர் கவியரங்கு

### என்னைத் தேடுகிறேன்...!

என்னில் நான் என்னைத்தேடுகிறேன்!
எப்பொழுதோ மண்ணைவிட்டு
வந்த நாள் முதலாய்
என்னில்நான் என்னைத்தேடுகிறேன்!

என்தேசவனப்பில் சுற்றித்திரிந்தேன்.
பெருமையில் மார்தட்டிக்கொண்டேன்
நண்பர்க்கு நல்வார்த்தை
நானெடுத்து உரைத்துவிட்டால்
என்னையே எசமானாய்
நான் நினைத்து இறுமாந்தேன்!
ஆரம்பபள்ளி படிக்கும்பிள்ளைகட்கு
அவர்க்கேற்ற ஆக்கங்களை
ஆக்கிக் கொடுத்துவிட்டு
என்னையே பெரியஆசானாய்
நான் நினைத்தேன்!அப்பொழுது!!

புலம்பெயர்ந்து இங்கே
புகலிடம் தேடி நிற்கையிலே
என்னையே நான் தேடுகிறேன்!
தஞ்சமனு கொடுப்பதற்குள்
ஆட்டம் கண்டுவிட்டேன்!
எம்மவர் உதவவேண்டும்!!
என்னைப்போல் உழலும்
எம்மவரைத்தேடுகின்றேன்!

என் பெற்றவரை எண்ணுகிறேன்,
பாசமிகுசோதரரை,சொந்தத்தை
ஊரவரை நினைக்கையிலே
சோகத்தை காணுகிறேன்!
தேனினியநாட்களை சிந்தையிலே
ஓடவிட்டு வேதனை வளர்க்கின்றேன்!
தாகம்வருகிறது தாய்நாடு,காணவென
ஆவலுடன் என்னில் நான்,
என்னையே தேடுகிறேன்!!

**கோண்டாவில் சிவகுமார்**
**கோப்பனேகன்-டென்மார்க்**

### நடந்தது என்ன..?

மண்ணை நனைக்கவந்த
மழைத்துளிகளில் சில
புசிப்பதற்கு சிறந்ததேனாகி
பூக்களில் இறங்கியிருக்குமோ
அப்பூவைச் சூடிய
என்னவளின் கூந்தலிலிருந்து
இதழ்வழி இறங்கி
நான் முத்தம் தருகையில்
என் உதட்டில் அத்தேன் துளிகள்
ஒட்டியிருக்குமோ?
என் உதட்டில் ஒட்டியிருந்த
தேன்துளியை பருகவந்த
எறும்புகளில் சில
உணர்ச்சிவசப்பட்டு
என் உதட்டைக்கடித்திருக்குமோ?
உதட்டு வீக்கத்துடன்
மருத்துவமனையின்
ஒரு ஓரத்தில் நின்றபடி
யோசிக்கிறேன் நான்!

**செந்தில்பாண்டியன்-மதுரை**

### ஒரே நோக்கில் போ...!

இன்றுவரை எத்தனையோ வீடு-கட்டி
எதுவுமேகடைசிவரைஇல்லாதுபோச்சு
என்றுநாம் அமைவீடிருக்கும்-தமிழ்
ஈழமதும் அன்றே எமக்குரியதாகும்

கொஞ்சமோபோனபொருள்ஐயோஇனி
கொஞ்சமோ போவதற்குள்ளதையோ
மிஞ்சுவதற்கேதேனுமுண்டோ-ஆமாம்
மேன்மைபெறுஅகதியாம் பட்டமாமோ

எங்கெலாம் எவ்வாறலைந்தோம்-அட
இன்னுமாமுடியாது?எம்ஆயுள்போச்சே
தங்குமிடம் ஒன்றுவாராதோ-ஓகோ
சவமானபிறகுவரும்சுடலையதுதானோ

எண்ணங்கள்,ஒன்றுமேல்ஒன்றாய்வந்து
ஏதேதோ செய்யுதே மறதி வாராதோ
புண்ணாகிப்போகுதே நெஞ்சம் ஆகா
போனதேன் மீண்டும்புறப்படுதுஇங்கே

ஆரிதற்கெலாம் பொறுப்போ,தெய்வம்
ஆள்கிறபோதிங்குஆரைநாம்சொல்ல?
வேரெங்கு,தளிரெங்குபல்லோர்-கண்டு
விரிவாகபேசியேபொழுதோட்டலேனோ

ஏமாற்று,பொய்,சூது,சூழ்ச்சி என்று
எப்போதும் பேராற்றல்காட்டுவதேனோ
நாமார்க்கும் குடியாகலாமோ-நாய்
நக்கிப்பிழைத்துவரும்,நாமுமதுவாமோ

துயர்க்கடல்நீந்துவதொன்றே என்றும்
தொழிலாகவுள்ளதே கூலிகண்ணீரே
அயருதே நினைவற்று மூளை-அட
ஆண்டவா!பாரடா அவலத் துயரம்!

அருமருந்தேனுமுண்டா? - உண்டு!
ஆனால் தமிழருக்கதிகநோயாச்சே
ஒரேநோக்கில் எல்லோரும் போனால்
ஒன்றுவரும்ஆக்கிடும்!இன்றிலழிக்கும்!

**தாமரைத்தீவான்-இலங்கை**

### ஆதங்கம்...!

ஏ!
சிலந்திப்பூச்சியே!
உன்னைப்பலமுறை
சீண்டியும்
சிடு,சிடுவென உன்
சிங்காரக்கோட்டையை
கட்டிவிட்டாயே!
நானும் கட்டிக்கொண்டிருக்கிறேன்
பெரும்கவிஞனாக....
ஆவேன் என்று
மனக்கோட்டையை..!

**மு.அருணகிரி-மதுரை.12**

### வாழ்வாரா....?

குடிகளைக்கலைத்தோர் வாழ
கொள்ளைகள் அடித்தோர் வாழ
துடித்திடச்செய்தொர் வாழ
துயர்ப்பட வைத்தோர் வாழ
பிடித்திட முனைந்தோர் வாழ
பிழைப்பினைக்கெடுத்தோர் வாழ
முடித்திட முயல்வோர் வாழ
முடிவுநாள் வரையும் வாழ!

மண்பறித்திட்டோர் வாழ
மனையெரித்திட்டோர் வாழ
கண்தமிழ் அழித்தோர் வாழ
கல்வியைச்சிதைத்தோர் வாழ
நுண்கலை கெடுத்தோர் வாழ
நூலகம் எரித்தோர் வாழ
பண்,இசை கலைத்தோர் வாழ
பதவிகள் குறைத்தோர் வாழ!

கூடியே கிடந்தோர் வாழ
குதிநரம்பறுத்தோர் வாழ
நாடிவந்தறுத்தோர் வாழ
நடுவழிபிரிந்தோர் வாழ
வாடிடவைத்தோர் வாழ
வாழ்க்கையை புரட்டி வாழ
கோடிநாள் முடிந்தால் வாழ்க!
கொடுமையில் குளித்தே வாழ்க!!

தன்னலம் பார்ப்போர் வாழ
தவறொடும் பிணைந்தே வாழ
புன்செயல் தனிலே காலம்
போக்கியே நெடுநாள் வாழ்க!
இன்செயல்,நன்செயல்கள்
எதுவுமே தெரிந்திடாமல்
வன்செயல் செய்தே நாளும்
வாழ்கவே! வாழ்க வாழ்க!!

**இ.தமிழரசி-கிண்ணியா**

### பாரதநாடு.....!

பாரதநாடு பழம்பெரும் நாடு
பாட்டாளிகள் நிறைந்த நாடு
பண்பு குறைந்தநாடு
பாதகர்நிறைந்த நாடு
பாமரன் வாழும் நாடு
பலவர்ணகொடிகள் பறக்கும்நாடு
சாமிகள் பிறந்தநாடு
சன்மார்க்கம் குறைந்தநாடு
மதம் வளர்ந்த நாடு
மமதை பெருகிய நாடு
உண்மைகள் மறைந்தநாடு
ஒற்றுமை குறைந்தநாடு
போதனைமிகுந்த நாடு
வேதனைமலிந்த நாடு
வஞ்சகர் நிறைந்த நாடு
லஞ்சம் மலிந்த நாடே நம்நாடு!
(நன்றி:பாரதியின் கவிதாதேவி)

**வதிலை வசந்தன்-இந்தியா**

### பெண்புலிகள்...!

புகைக்குண்டை மடிசுமந்தே
பகைக்களத்தில் பாய்ந்திடுவோர்!
பூத்தொடுக்கும் கரங்களினால்
போர்வாளை ஏந்திடுவோர்!
தணியாத இவர் காதல்
தமிழ்ஈழ விடுதலையாம்!
ஈழத்தின் விடுதலைநாள்
இவர்களுக்கு திருமணநாள்!
போர்ப்புயலில் பெண்புலிகள்
பூங்கரத்தால் ஏற்றிவைத்த
சுதந்திரத்தின் சுடர்விளக்கை
சுழல்காற்றே வணங்குதம்மா!
தமிழ்ப்புலி தம் குருதியிலே
தழைக்கின்ற தமிழ்ஈழம்!
அகிலத்தில் ஓர்நாடாய்
அய்நாவில் அமர்ந்திடுமே!!

**தமிழகஉணர்ச்சிக்கவிஞர்**
**சிங்காரவேலன்-திருச்சி-2**

### கவிதை எழுத....!

கவிதை எழுத எண்ணினேன்,
எதைப்பற்றி எழுதுவதாம்?
ஏழ்மை..? அது புதுமையல்ல!
ஊழல்...? அது வீண்நேரம்
உழைப்பு..?அது வர்ணிக்கமுடியாதது!
கல்வி...? அது கரையில்லாதது!
அழகு..?அது எழுத்தால் முடியாதது!
ஞானம்?அது எனக்கு அப்பாற்பட்டது!
அன்பு..?அது எழுதி வராதது!
ஆக,எதைப்பற்றித்தான் எழுதுவதாம்!

**ராஜி சந்திரன்-லண்டன்**

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
பன்னாட்டு,தமிழ்எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலகங்கள் ,அரசியல்கட்சிகள்,சங்கங்கள்,பத்திரிகைகட்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழர் சனநாயகத்தமிழர்களின் கொள்கைமுரசாக விளங்கும். வாசகர்கருத்துக்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்மின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

## கேட்டீர்களா சேதி!

1.ஈழத்தமிழர் அவசரஉதவி,தாய்நாடு-புனரமைப்பும்,அபிவிருத்தியும்! எனும் தலைப்பில் துறம்சோ சிவராஜாவின் அயராதஉழைப்பில் உருவாகி பாடுபடும் நோர்வே தமிழர் அபிவிருத்தி வலையம்,தமிழர் புனர்வாழ்வுக்கழகத் துடன் இணைந்து அருமையான கருத்தரங்கை, ஒஸ்லோ பிளாசா-ஓட்டல் 33மாடியில் 10.11.98ல் 9.00-16.00 வரை வெளிநாட்டார்திணைக்கள ஆதரவில் ஒழுங்குசெய்திருந்தது.
உள்ளாட்சி-பிராந்திய அமைச்சின் அரசசெயலர் நில்சன் ஆரம்பித்துவைக்க, சிவராஜா அறிமுகஉரை நிகழ்த்தி னார். அவுஸ்ரேலியாவிலிருந்து வந்த த.பு.கழக பிரதமநிர்வாகபொறுப்பாளரும்,சர்வதேச இணைப்பாளருமான டாக்டர் ஜே.மகேஸ்வரன் தமிழர்பிரதேசத்தில் நிலைமையும்-புலம்பெயர்தமிழர்,வெளிநாட்டுஉதவிஅமைப்புகள், அரசுகள் உதவி எப்படி தமிழர் நிவாரணம்,புனரமைப்புக்கு உதவலாம்?என எடுத்துரைத்தார். றெட்பாணாவை சார்ந்த எய்னார் றிஸ்ராட் இலங்கையில் தம்பணிகள் பற்றி எடுத்துரைத்தார்.அபிவிருத்திநிதியம் சார்பில் தகவல் அதிகாரியும் முன்னாள் செந்தேர்தல்அணிக்கட்சி தலைவருமான அக்சல் நார்ஸ்ராட் இலங்கையில் தம் பணி பற்றி எடுத்துரைத்தார்.நோர்வேதமிழர் எப்படி தமிழர்பிரதேசத்தை கட்டியெழுப்ப உதவலாம்? எனும் கலந் துரையாடலில் பல தமிழர்,நோர்வேஜியர் கருத்துரை தந்தனர்.முடிவில் நோர்வேயிலுள்ள சகல தமிழ்அமைப்பு களையும்சேர்த்து சனநாயகரீதியில் குடைஅமைப்பை உருவாக்குவதெனவும் வருடாந்தமாநாடு நடாத்துவதென வும்,அபிவிருத்திநிதி சேர்ப்பதெனவும்,நாட்டுஅபிவிருத்திக்குதொண்டர்சேவை அமைக்கவும்தீர்மானிக்கப்பட்டது.
வறிய-பணக்காரநாட்டு இடைவெளியை குறைப்பதும்,ஆசிய,ஆபிரிக்க வறியநாடுகளில் நடக்கும் யுத்தங்களை அரசியல்தீர்வுமூலம் விரைவில் தீர்க்க உதவுவதும்,நிதிஉதவியும் முக்கியம்!எனும் கருத்தை வலியுறுத்திய சர்வதேசதமிழர் ஆசிரியர்,நோர்வேயிலுள்ள சகல கட்சிகள்,உதவிஅமைப்புகளில் தமிழர்கள் அங்கம்வகிப்பதும், எமது நிலைமையை எடுத்து விளக்குவதும் முக்கியம்!என குறிப்பிட்டார்.
K.SivarajahTDNN,Vestregt.64,9008 Tromsø;TRO,Dr.Jay Maheswaran,Pb.4254,Knox city,Victoria.3152,Australia TRO,Pb.4742,Sofienberg,0506 oslo Tel/Fx.47.22717537 Aksel Nærsatd,The Devt Fund,Nedregt 8,0551 oslo Fx. 22352060,V.SivanadiyanTRO,83/2,KKS rd,Kokuvil,Jaffna,Srilanka;ReddBarna,Pb.6902,St.Olavsplass,0130 oslo

2.நோர்வேயில் 1996ன்பின்பு தஞ்சம்கோரிய600தமிழர்களில் 330பேர் நிராகரிக்கப்பட்டு தலைமறைவாக வாழ்ந்து வருகிறார்கள்.போலிசால் பிடிக்கப்பட்டு பலர் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.இது பற்றி தமிழர்நடவடிக்கை குழு,செயற்பட்டதால் பாராளுமன்றில் சோசலிசஇடதுசாரிஎம்.பி.,ஓகொட் வல்லா,நீதிஅமைச்சர் ஔட்இங்கர் ஔர விடம் கேள்வி எழுப்பினார்.இனரீதியான பயமுறுத்தல் கொழும்பில் உள்ளபோது,கொழும்பை சாராதவர்களை அனுப்புவதுசரியா?எனவும் சிலர்தற்கொலைமுயற்சியிலும் ஈடுபட்டனர்.தமிழர் பதட்டமடைந்துள்ர்,என சொன்னார். விண்ணப்பம் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட முறைப்பாட்டு அடிப்படையில் தனிதனியாக நன்கு பரிசீலிக்கப்பட்டு ஆராயப்பட்டுமுடிவெடுக்கப்படுவதாயும்,அகதிநிபந்தனையை பூர்த்திசெய்யாதவர்கள் அனுப்பப்படுவர்!ஐ.நா.அகதி தூதுவர்,ஏனைய நோடிக்,ஐரோப்பியநாடுகள் முடிவின்படி வடகிழக்கு தமிழர்க்கு கொழும்பு பாதுகாப்பென தாம் கருதுவதாயும்,யுத்தம்நடக்கும் வடகிழக்கில் பொதுமக்கள் பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ளதால் தாம்,யாரையும் அங்கு அனுப்பவில்லை,கொழும்பில் புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் மட்டுமே தமிழர் கடுமையாக சோதிக்கப்படுகின்றனர்.கைதாகுபவர்கள் 1-24மணியில் விடுதலைசெய்யப்படுகிறார்கள்! 1994இலிருந்து 100தமிழர் திருப்பிஅனுப்பப்பட்டனர்!அவர்கட்கு பாரதூரமாக எதுவும் நடந்ததாக எமக்கு தகவல்வரவில்லை! கொழும்பிலு ள்ள எமது பிரதிநிதி திருப்பிஅனுப்பப்படுவோர் பாதுகாப்பு,மனிதஉரிமைநிலைபற்றி எமக்கு தகவல் தருகிறார்! என ஔர பதிலளித்தார். கொழும்பில் பாதிக்கப்படும் தமிழர்கள் முறைப்பாடுகளை ஐநா.அகதிதூதர்,மன்னிப்பு சபை,நோர்வே,கனடா,டென்மார்க்,பிரிட்டன்,ஜேர்மனி,அமெரிக்கா,பிரான்ஸ் தூதர்கட்கு அறிவிப்பது நலம்! கண்ணிவெடியில் காலிழந்து வந்த இளைஞர்,பிளேடால் கீறி தற்கொலை செய்யமுயன்றவர் என பலரையும் நோர்வே திருப்பிஅனுப்புவது மனிதாபிமானமற்ற செயல்! என பலர் தெரிவித்தனர்.

3.பெரியார்யுகம் என்ற ஆங்கிலஇதழ் கடந்த 1993இலிருந்து ஆனைமுத்து,காந்தியம் எஸ்.ஏ.டேவிட் உட்பட பலர்சேர்ந்து நடாத்திவருகிறார்கள்.பெரியாரின் சோசலிச,மனிதாபிமான,பகுத்தறிவு,சுயமரியாதைக்கொள்கைகளை பிரசாரம் செய்யும் இவ்விதழ் தெடர்ந்துவெளிவர உலகத்தமிழர்கள் ஆதரவுதரும்படி அன்பாக கேட்டுள்ளனர். உதவிசெய்ய,சந்தாபெறவிரும்புவோர்:V.Anaimuthu/Editor,19,Murugappa st,Chepauk,Chennai.5 tel.44.8522862

4.நோர்வே முத்தமிழ்அறிவாலய 4வது ஆண்டுவிழா 25.10.98 மாலை,∴புல் தியேட்டரில் சிறப்பாகநடைபெற்றது. இயலிசை-நாட்டியபேராசான் இணுவில் வீரமணிஐயரின்,பிரதமசிஷ்யையான சங்கீதவிதூசி,சங்கீதரத்னா திருமதி. சிவசக்தி சிவனேசன்(லண்டன்)பிரதமவிருந்தினராயும்,ஜேர்மனி நாட்டியநங்கை செல்வி பிரசாந்தி சேகர் கௌரவ விருந்தினராயும் கலந்துசிறப்பித்த விழாவில் புதியபுரவி-சிறுவர்அபிநயம்,புஷ்பாஞ்சலி நடனம்,உல்லாசப்பயணம், கீர்த்தனம்,யாழும்குழலும்-பாலர்பாடல்,ஆடும்சிலைகள்-நாட்டியநாடகம்,அடையாளஒளியேற்றல்,வண்ணமலர்கள்-இசைநாடகம்,சிலநிமிடங்கள் கவிதாநிகழ்வு,தாய்நாட்டை மறக்கலாமா?பிரதமவிருந்தினருரை,கௌரவவிருந்தினர் உரை,திறமைக்கு சான்றிதழ் வழங்கல்,வீணையின்நாதம்,வருமுன் காப்போன் நாடகம்,தில்லானா நடனம் என நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன.அதிபர்,ஆசிரியர்கள்,பெற்றோர்கட்கு எமது வாழ்த்துக்கள்!
சுமார் 90 பிள்ளைகளும்,15ஆசிரியர்களுமுள்ள அறிவாலயம் தொய்யன்பாடசாலையில் நன்குஇயங்கிவருகிறது. மொழியும்,கலையும் வளர கைகொடுக்கும் பணியை சர்வதேசதமிழர் உளமார பாராட்டுகிறது.எண்ணிக்கையில் குறைந்தவராயினும் எண்ணத்தின் மேன்மை சிறப்பு என விழாமலரில் அதிபர் கார்மேகம் நந்தா குறிப்பிடுவது சாலச்சிறந்ததே!Muththamil Arivaalayam, Herslebsgt 43,0578 Oslo,Norway.

5.காதல்கவிதை படப்பிடிப்புக்காக சர்வதேசதமிழரின் அபிமானம்பெற்ற நடிகர் பிரசாந்த் சகாக்களுடன் லண்டன் பயணமானார். இவரை தமிழகமுதல்வர் கலைஞர் வாழ்த்தி விடைகொடுத்தார்.கதை,வசனம்,பாடல்கள்,இயக்கம் அகத்தியன் செய்ய,இசைஞானி இளையராஜா 7பாடல்களை லண்டனில் பதிவுசெய்தார்.லண்டன்,வேல்ஸ்,அயர் லாந்து,ஸ்கொட்லாந்து,காசபிளாங்கா,மொரக்கோவில் படம்பிடிப்பு இடம்பெறும்.ஜீன்ஸ் படதயாரிப்பாளரான அசோக் அமிர்தராஜின் தயாரிப்பே இது! கண்ணெதிரே தோன்றினாள் படத்தை கலைஞர் ரசித்து பாராட்டினார்.

6.பாரிஸில்,லாச்சப்பலில்,11.7.98ல் சர்வதேசதமிழர் இணைப்பாளர் பற்குணராஜா ஒழுங்கமைப்பில் ஓர் இலக்கிய ச்சந்திப்பு நடைபெற்றது. சமர் ஆசிரியர் ரயாகரன்,அம்மா ஆசிரியர் மனோ,பிரெஞ்சுமொழி வல்லுனர் சச்சிதா னந்தம்,அசோக் ஆகியோருடன் சர்வதேசதமிழர்-ஆசிரியர் கலந்துகொண்டார்.அனுபவங்கள் பரிமாறப்பட்டன.

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து ஆதரவு தருக ! உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சாதுவின் சுத்துமாத்து

யேசுவே மெய்யான தெய்வம் என தலைப்புக்கொண்டு சிலவாரங்களுக்கு முன்வந்த துண்டுப்பிரசுத்தின் எதிரொலியே இதுவாகும். மதவுணர்வை மறந்து நட்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நோர்வே தமிழ்சமூகத்திடையே வைரசு கிருமிபோல் நுழைந்துள்ளது கிறீஸ்தவமதப்பிரசாரமும், மதமாற்றலும், இந்துமத இழிவுபடுத்தலும். வைரசுக்கு மருந்தே கிடையாது. அதுதானாக விட்டுச் சென்றால் சரி, அல்லது உயிருக்கு உலை வைக்கும். இவ்வைரசுக்களே உணர்வுகளுக்கு உலைவைக்கும். இந்நிலை தொடருமாயின் இந்துக்கள் ஒன்றிணைந்து, தடுப்பு ஊசிகளைக்கண்டு பிடிப்பதுடன், அதிர்ச்சி வைத்தியம் செய்யவேண்டி இருக்கும். சாது எனத்தனக்கே பெயரிட்டுக்கொண்டு சங்காரத்துக்கு வந்த செல்லப்பாவும் இவர்குழுக்களும் இதைக்கவனத்தில் கொள்ளவேண்டும். மதம் என்று மதம் பிடியாது உங்களது நம்பிக்கையை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். மூளைச்சலவை செய்ய முயற்சிக்காதீர்கள்.

கிறீஸ்தவத்தையும், யேசுவையும் வாய்விட்டுக்கதைக்காதவர்கள் கூட மதம் மாற்ற முயலும் நடவடிக்கைகளால் விசனமடைந்துள்ளார்கள். உலகில் நடை பெறும் காரியங்கள்,இந்துவேதமும் இது உலகின் கடைசிகாலம் எனகூற மறுக்கவில்லை என் எழுதியிருந்தார்கள். இந்துவேதங்களில் எங்கும் கூறவில்லை உலகம் அழியப்போகிறது என்னிடம் ஓடிவாருங்கள் என்று. இக்கலியுகம் அழிவதற்கு என்னும் எத்தனையோ வருடங்கள் உள்ளது எனக்கூறுகிறது. மக்களை வெருட்டி மதம் மாற்றாதீர்கள் இவர்களுடைய கதை,கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தது போல் இருக்கிறது.

யேசுவே முற்றிலும் உண்மையானவர் என நீங்கள் நம்பலாம். அது உங்கள் சுதந்திரம். மாற்று நம்பிக்கைகளைக் கொச்சைப்படுத்துவதையும், மூளைச்சலவை செய்வதையும் அனுமதிக்க இயலாது. யேசுவை அன்றி மோட்சம் வரஇயலாது என நரகக்கிடங்கில் நின்று எழுதுகிறீர்கள், கதைக்கிறீர்கள். மனிதத்தின் புனிதத்தையும், நம்பிக்கையையும் மதிக்காதவர்கள் வேறு எங்கு இருக்க முடியும். நரகத்தை ஒஸ்லோ நகரத்தில் உருவாக்காதீர்கள்

எத்தனையோ கோடானுகோடி வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் பிறந்து இறந்திருக்கின்றனர்.இவர்கள் யேசுவை அறிந்திருக்க நியாயம் இல்லை. அப்படியாயின் நரகம் முட்டி வழிந்து கொண்டிருக்கும். இனி அனைவருக்கும் சொர்க்கத்தில் தானே வாழ்வு. மனிதத்தை மதிப்பவனுக்கு நரகம் கிடையாது.

இந்துமதத்தின் நான்கு வேதங்களும் படிமுறை வளர்ச்சிகண்டவை. ஆதிவேதமான இருக்குவேதத்தில் உள்ள ஒரு சொல்லைத் தப்பாகப் புரிந்து கொண்டு செல்லப்பர் வந்திருந்தார்.இறைவன் மனிதனாய் பிறந்து மரிக்கவேண்டும் எனில் இந்துமதத்தில் விரல் விட்டு எண்ணமுடியாத அளவிற்கு கடவுள் பிறந்து, வாழ்ந்து, வழிகாட்டி, இறந்திருக்கிறார். அவதாரபுருசர்கள், சமயகுரவர்கள், நாயன்மார்கள், ரிஷிகள் எனப்பலர் உள்ளனர்.

இந்துவேதங்களை முறைப்படிகற்ற வேதபண்டிதர் சாது செல்லப்பா எனத் துண்டுப் பிரசுரத்தில் எழுதியிருந்தார்கள். பண்டிதர் என்பது தெருவில் போறவாறவர்களுக்குக் கொடுக்கும் பட்டமா? இந்தியாவில் தாமக்குத்தாமே வைத்துக் கொள்ளும் டாக்டர் பட்டங்கள் போன்றதா இதுவும்.

சாது செல்லப்பா ஒரு வேதபண்டிதராய் இருந்திருந்தால் வேதங்களைக் கொச்சைப் படுத்தவோ, துர்பிரயோகம் செய்யவோ முயன்றிருக்க மாட்டார். பெரிய வேடிக்கை என்னவெனில் இந்துமதவேதங்களைச் சரியெனக் கொண்டு யேசுவுக்கும், கிறிஸ்தவத்துக்கும் வக்காலத்து வாங்க முயற்சிக்கிறார். வெள்ளையர்கள், எமது மக்களையே வைத்து எம்மைக் கொன்றார்கள்; மதம் மாற்றினார்கள். இதுவும் அப்படியான ஒன்றேயாகும்.

செல்லப்பாவினது கருவறுப்பு என்னவெனில் கூடிக்கழுத்தறுப்பது,வேதங்களைக் காட்டி இந்துக்களை மதம்மாற்றுவது. இதற்குப் பிராமணன் என்ற வேடம் வேறு.இதற்கு பிரசாரத்துக்கு அணிந்து வந்த உடைகளே நல்ல உதாரணமாகும். வெளியில் இந்துச் சன்னியாசியர் போல் காவியும், உள்ளே கிறிஸ்தவப் பாதிரிமாரின் உடையான கசொக்கும் அணிந்திருந்தார் என அறியப்படுகிறது.இவர் சாதுவா? சகுனியா? சாத்தானா? இவரின் மொழியில் கூறிடின் சாத்தான் வேதம் ஓதுகிறது

**நோர்வே நக்கீரனார்**

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் /யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை)புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கன்னட இனவெறிபிடித்த கருநாடகக் காவல்துறையால் அலைக்கழிக்கப்படும் 119 தமிழர்களுக்கு உதவிசெய்யுங்கள்!

சந்தன வீரப்பனுக்கு உதவியதாகப் பொய்ப்பழி சுமத்தப்பட்டுக் கடந்த 8 ஆண்டுகளாக மைசூர்ச் சிறையில் வாடும் தமிழர்கள் 23 பேர் வழக்கே இல்லாமல் 'தடா'வில் வாடும் தமிழர்கள் 119 பேர் இவர்களில் பெண்கள் மட்டும் 29 பேர்.

கொள்ளேகாலம், மேட்டூர், சத்தியமங்களம், கோபிநத்தம், பருகூர், மலை மாதேசுவரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த அப்பாவி மக்களுக்குக் கருநாடகத்-தமிழகக்-கூட்டு அதிரடிப்படை இழைத்த கொடுமைகள் கணக்கற்றவை. சரியான போக்குவரத்துகள் இல்லாத இந்தப் பகுதிகளில் வாழும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பலரைக் கருநாடகக் காவல்துறை ஈவு இரக்கமின்றிக் கொன்று தீர்த்தது. தமிழ்ப் பெண்கள் பலர் கற்பழித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளனர் வீடுவாசல் ஆடு மாடுகளைக்கூடக் கொள்ளையடித்துள்ளனர்.

தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றிப் பல்லாயிரக் கணக்கான மடல்களையும் கோரிக்கைகளையும் விண்ணப்பங்களையும் பலவேறு அரசியில் தலைவர்களுக்கு அனுப்பியும் கூட இவர்களுக்கு உதவ யாருமே முன்வரவில்லை.

தனித்தமிழர் கழகத் தலைவர் கா. நகைமுகன், தமிழாய்வு அறிஞர் குணா, கருநாடகத் தனித்தமிழர் கழக அமைப்பாளரான வழக்குரைஞர் பெ. நா. தேவதாசு போன்றோரின் இடைவிடாத முயற்சிகளால் மைசூர்ச் சிறையில் வாடும் தமிழர்களின் வழக்கு 8 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக உசாவலுக்கு வந்துள்ளது.

இவர்களுக்காக வழக்காடக் கருநாடகத்தின் மிக முதிர்ந்த வழக்குரைஞர்களின் ஒருவரான திருமதி கற்பகம் காமத் அவர்கள் முன் வந்துள்ளார்கள். 23 கொலை வழக்குகள் உட்பட 119 தடா வழக்குகளையும் நடத்தி முடிக்க ஏறத்தாழ 5 இலக்கம் (FIVE LAKHS) உருபாக்கள் வரை செலவாகும்

பெங்களூரில் உள்ள தமிழர்நல உணர்வாளர்களின் உதவியால்தான் இந்த வழக்குகள் உசாவல் கட்டத்தையே எட்டியுள்ளன மிகக் கொடிய "தடா"ச் சட்டம் விலக்கிக் கொள்ளப் பட்டதாக அறிவிக்கப் பட்ட பின்னரும் 119 தமிழர்களுக்கு மட்டும் "தடா"வின் இருள் விலகியபாடில்லை

இதற்கெல்லாம் காரணம் கருநாடக அரசின் கண்மூடித்தனமான கன்னட இனவெறிதான். மின்சார அதிர்வு உட்பட மிக மோசமான சித்திரவதை முறைகளால், ஒன்றுமறியா அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழித்த கருநாடகக் காவல்துறையின் வன் கொடுமைகளிலிருந்து மீதமுள்ள தமிழர்களையாவது காப்பாற்ற வேண்டாமா?

தனித்தமிழர் கழகத்தின் முயற்சியாலும் வழக்குரைஞர் கற்பகம் காமத் அவர்களின் திறமையாலும் எப்படியாவது தலைதப்பி விடுதலையாகிவிடுவோம் என்றும் நம்பிக்கை இப்போதுதான் இந்த 119 தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கை பொய்க்காதவண்ணம் தங்களால் ஆன பண உதவிகளைச் செய்ய முன் வருமாறு தமிழர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் வேண்டுகிறோம்.

தொடர்புக்கான முகவரி :

**தனித் தமிழர் கழகம்,**


கா. நகைமுகன் பி.இ. (பி.எல்.)
எண். 51, எப். ஆள்வார் திருநகர்
அனேக்ஸ், சென்னை-600 087

வழக்குரைஞர் பெ. நா. தேவதாசு எம். ஏ. எல்எல்-பி
50, சிவன் செட்டித் தோட்டம்
பெங்களூர்-560 042

www.tamilarangam.net

# முடங்கள்....!

காரையூரான் இ.தியாகலிங்கம்

பேசினா என்செய்திடுவாயடி. நீயோ புருசனத் திண்டவள். இங்க தினவெடுத்துப்போய் கனா காணுறத்துக்கே இந்த நொண்டிய இப்பிடி வெளிய அனுப்பிப் போட்டு அங்க இருக்கிறா?
நீங்க இதுக்கு மேல மரியாதை இல்லாமல் கதைச்சியள் எண்டா நடக்கிறதே வேற. கட்டாயம் நான் இதுக்கு பொலிஸ்சில சொல்லாமல் விடப் போறதில்ல. பாவம் மாலினிய நினைக்கேக்கதான் பாவமா இருக்கு.
அவளுக்காக நீ கவலைப் பர்றியாக்கும். அப்ப நீ பெத்துத்தாவன் ஒண்டா.
கடவுளே.
நான் என்னைக் கட்டுப் படுத்த முடியாது அழத் தொடங்கினேன். எனது பெண்மையின் பலவீனத்தை அதற்கு மேல் அடக்கி வைக்க முடியாது அழுதேன். மனம் எல்லாம் இரணமாக எரிந்தது. அவன் விடவில்லை தொடர்ந்து பேசினான்.

அடியே ! நீங்கள் எல்லாம் வீட்டுக்க ஒழுங்கா இருக்கோணும். இல்லாட்டி நான் இதைவிட அதிகமாகச் செய்வன். என்னப் பற்றித் தெரிஞ்சு கொள்ளுங்கோ. பெட்டக் கழுதையளுக்கு என்னடி கொழுப்பு வேண்டிக் கிடக்குது.

கதவின் பக்கத்திலே பனிவெட்டும் மண்வெட்டி போன்ற கருவி கிடந்தது. எடுத்துக் கொண்டே சாத்தட்டா? சாத்தினால்..........? ஐயோ பாவம் மாலினி. வினிகூடப் பாவமல்லவா? என்னைப் சிறையில் போட்டுவிட்டால் அவளும் அனாதையாகி விடுவாள் அல்லாவா. நான் பொறுமையாக வீடு திரும்ப முயற்சித்தேன். அவன் தெடர்ந்தும் பேசினான். இடையிடையே பச்சையான வசனம் பாவித்தான்.

பெட்டக் கழுதையளே நீங்க எப்பவும் அம்பிளையளுக்கு அடங்கித்தாண்டி நடக்கோணும். நான் தாண்டி இங்க ஆம்பிள. எனக்கு அடங்காட்டி தொலைச்சிடுவன் தொலைச்சு.

எனக்கு அதற்கு மேல் கேள்க்க முடியவில்லை. கடவுளே இது என்ன சோதனை? என்னை விசு எந்தக் கோபத்திலும் இப்படிப் பேசினது கிடையாதே. தரம் கெட்ட வார்த்தை கூறியது இல்லையே. அவர் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா?. இவனது கைகால்களை முறித்து போட்டிருக்க மாட்டாரா? இதுக்குத்தானா நான் வெளிநாடு வந்தநான்? என் சிந்தனை இடையறுந்தது. கோபம் கொப்பழிக்க அவனைப் பார்த்து,
போடா நாயே.
என்னடி.
போடா.

வினி அழுது கொண்டு இருந்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்வதைக்கூட மறந்து சிந்தனையில் இருந்த என்னை அவளது கேள்விக் கணைகள் தாக்கியது.
அம்மா?
ம்.
அண்டைக்கு என்னப் பேசேக்க சமாதனப் படுத்தினியள். இண்டைக்கு உங்களையும் அவர் பேசிட்டார். நீங்களும் இண்டைக்கு அழுகிறியள் தானே? அண்டைக்கு எனக்கு எப்பிடி இருந்திருக்கும் . ஆனா நீங்கள் என்னைச் சமாதனப் படுத்தினியள். ஏன் அம்மா தனுமாமா பேசுறார் ? அவருக்கும் எங்களுக்கும் என்ன பிரச்சன?
தெரியல்லலையே அம்மா. சும்மா சும்மா பேசுறாரே.
எனது குரல் உடைந்து போயிற்று.
அம்மா அழாதேங்கோ.
ம்.
பொலிஸ்சுக்கு சொல்லுவமே அம்மா?
வினி . சொல்லோணும் எண்டு நினைக்கிறியா.
ஓம் அம்மா.

கூறிவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது மாலினி எதிரே நின்றாள். அவள் கணீரால் தன்னைக் கழுவிக் கொண்டிருந்தாள். எதிர்பாராத போது கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினாள். வினியை கட்டி அணைத்தாள். என்னால் மாத்திரம் அல்ல வினியாலும் கண்ணீரைப் பொறுக்க முடியவில்லை. அது இமைக்கட்டை உடைத்து , முகக்குழியில் விழுந்து , கீழ்நோக்கி ஓடியது. வினி மாலினியின் கூந்தலை வருடினாள். நான் அப்போது என்னிலைமையை உணர்ந்தேன். மாலினியை நினைத்துப் பதறிப் போனேன்.

எனக்கு நீங்கதானக்கா கண்கண்ட தெய்வம். நீங்க தான் எனக்கு மன்னிப்பளிக்கோணும். அவருக்காக நான் எப்பிடி உங்களிட்ட மன்னிப்பு கேக்கோணும் எண்டாலும் கேக்கிறன். தயவு செய்து பொலிஸ்கிலிஸ் எண்டு போயிடாதேங்கோ. இந்தக் கட்டடத்துக்கு தெரிஞ்ச பிரச்சன இந்த ஊருக்கே தெரிய வேண்டாம் அக்கா. தயவு செய்து எனக்காக வேண்டி அவர மன்னிச்சிடுங்க. அவர் பேசினத மனசில வைச்சிருக்காதேங்க.
........................ம்? மாலினியே தனுவை கெடுப்பதாயும் , தன்னை தானே அடிமைப் படுத்துவதாயும் எனக்குத் தோன்றியது.
வினி சொல்லுவினி. மாமா வெறியில செய்திட்டார். எனக்காக உங்க அம்மாவ மன்னிக்கச் சொல்லு வினி. உங்க அம்மாவ போன் பண்ண வேண்டாம் எண்டு சொல்லுவினி. பிளீஸ்வினி.
மாமா தொடந்தும் பிரச்சன பண்ணினா?
நான் இனிமேலைக்கு பிரச்சன பண்ணாமல் பாக்கிறன் அம்மா.
உங்க சொல்லுக் கேப்பாரா?
...............?
ஏன் பேசிறியள் இல்ல அன்ரீ ? சொல்லுங்கோ. உங்க பேச்சு அவர் கேப்பாரா?
கேக்க வைக்கிறன்.
எப்பிடி.
தெரியல்லையே.
மாலினி கோவென அழுதாள்.

நான் உயிர் பெற்றேன். பாவம் அவளை இதற்கு மேல் வதைப்பது நியாயமல்ல. இல்லை இது வரை வதைத்ததே நியாயமில்லை. இவளும் என்வினி போலத்தான். இவளால் இயலக் கூடியது எது? என்மனதில் இன்னொரு கேள்வி பிறந்தது.

மாலினி ! நான் யாருக்கும் இத சொல்லேல்ல.
தாங்ஸ் அக்கா . றெம்பதாங்ஸ். நான் இந்த உதவிய ஒருநாளும் மறக்க மாட்டன்.
நான் அப்ப வாறன்.
மாலினி.
என்ன ?
மாலினி கேள்வியோடே பார்த்தாள்.
வீட்டுக்கு வா.

வினியும் நானும் உள்ளே வர மாலினியும் வந்தாள். அவள் உடம்பு குளிரில் நடுங்கம் கோழிக்குஞ்சாய் இருந்தது. இப்படிப்பட்ட பெண்ணுக்குத் தனு கணவனாய் வாய்த்தது கொடுமைதான். தனுவுக்காக இவளை ஒருபோதும் வெறுக்க முடியாதுதான்.
என்னக்கா யோசிக்கிறியள்.

ஒண்டுமில்ல.
வினி?
ம்..என்னம்மா?
நீ போய் வீட்டுப் பாடங்களைப் படி . நான் அன்ரியோட கொஞ்சம் கதைக்கோணும்.
சரியம்மா?
வினி தானே தனது வண்டியை இயக்கிக் கொண்டு சென்றாள்.
என்னக்கா என்னோட கதைக்கோணும்.
நீ இப்பிடி எத்தின நாளைக்கு வாழப்போறா?
அவரில பிழையில்லையே?
என்ன சொல்லுறா?
அவர் நல்லாய் இருந்தவர். குழந்தை இல்லையெண்டதால அவருக்கு வெறுப்பு. அதாலதான் இப்பிடி யெல்லாம் நடக்கிறார்.
குழந்தை இல்லாததுக்கு நீ மாத்திரமே காரணம்?
அப்பிடித்தான் அவர் நினைக்கிறார்.
செக் பண்ணேல்லயே?
ஒண்டும் பெரிசா கண்டிபிடிக்ககேல்ல அவங்கள்.
சரி கண்டு பிடிச்சிருந்தாக்கூட இப்பிடி நடக்கிறதே? இதென்ன கொடுமை? குறையிருந்தா உரிமையெல்லாம் இல்லாத அடிமையே?
பிழைதான். ஆனா அவர் அப்பிடி நடக்கிறாரே? அவரால தாங்கமுடியாமல் இருக்குது.
உனக்குந்தானே அந்த வேதன? அப்பிடி இருந்தும் நீ கடமைய செய்யாமல் விட்டியே?
இல்ல.
அப்ப அவர்மாத்திரம்?
அவர் ஆம்பிள.
இடியட். சொறி மாலினி.
பறுவாய் இல்ல.

நான் ஆத்திரத்தில அறிவிழக்கிறன். ஆம்பிள ஆம்பிள எண்டு இன்னும் எத்தின நூற்றாண்டுக்குச் சொல்லிக் கொண்டு இருப்பம். அன்புக்கு அன்பு செலுத்தோணும். அடிமையா எண்ணிட்டா அதுக்குப் பயப்பிடக்கூடாது. நீ இப்பிடி நித்தம் வேதனப் பர்றதிலும் பார்க்க இரண்டு பெரும் செக் பண்ணி , யாரில பிழை இருக்கெண்டத தெரிஞ்சு கொண்டு, அதுக்கேத்த மாதிரி ஒரு வழியப் பாக்கிறதுதானே? என்னப் பொறுத்த வரையில நீ அனுபவிக்கிறது தேவையில்லாத வேதன.
அவருக்கு குறை யெண்டா நான் அவரோட சந்தோசமா தொடர்ந்த வாழுவன். ஆனா எனக்கு குறையிருந்தா அவர் என்னைத் தொடர்ந்து வைச்சிருப்பாரா?. எனக்கு அவர் வேணும்.
நித்தம் சண்டைப் பேரியள். அப்பிடி இருந்தும்..........?
அவருக்கு பூப்போல மனசு. இடையில வந்த வேதனையால இப்பிடி.
பெம்பிளையள் எல்லாம் உன்ன மாதிரி இருக்கிறதாலதான் இவையெல்லாம் இப்பிடி ஆடுகினம். சரி மாலினி உனக்கு நம்பிக்க இருக்கிறதப்பார்த்தா ஒருநாளைக்கு அவர் திருந்துவார் எண்டு நானும் நினைக்கிறன். ஏதோ நீங்கள் நல்லா இருந்தா சரிதான். நான் விதவையா இருக்கிறதால சிலவேளை ஆம்பிளையள் கோவப் படுகின்றதையே வெறுக்கிறனோ எனக்குத் தெரியேல்ல. ஆனா விசு உயிரோட இருந்த மட்டில என்னோட ஒருநாள்கூட அவர் அப்பிடி நடந்ததில்ல. பாவம் அந்தமனிசன் மிதிச்ச இடத்துப் புல்லுக்கூடச் சாகாது.
அது நீங்க செய்த அதிஸ்ரம்.
அதோட பாவமும் நான் செய்திருக்கிறன்.
காவலப்படாதேங்க. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கஸ்ரம். எல்லாம் அந்தக் கடவுளின்ர லீலை.

வாரும் கிச்சினுக்க போவம். ஏதாவது குடியும். நான் கேக்கவே மறந்திட்டன்.
வேண்டாமக்கா.
முதல் முதல் வந்திருக்கிறீர் குடிக்காமல் போக விடமாட்டன். சரி ஏதாவது குளிராத்தாங்க. அவர் வாறத்துக்கிடையில நான் போகோணும்.

கொடுத்ததை மடக்கு மடக்கு எனக் குடித்தவள் மாயமாய் மறைந்துவிட்டாள். நான் இரவுச் சமையலைத் தொடங்கினேன். என்மனதில் என்னை அறியாமலே அந்தத் தாழ்வு மனப் பாண்மையின் கேள்வி எழுந்தது. விதையாய் இருந்து விரகத்தை அனுபவிக்கும் பொறாமையில்தான் அப்படிக் கதைத்தேன் என மாலினி எண்ணுவாளா? கேள்வி உதித்தபோது மனது திடுக்கிட்டது. நான் அப்படிக் கதைக்காமல் இருந்திருக்கலாமோ எனத் தோன்றியது. ம். இனி நடந்தது நடந்ததுதான். என்மனதில் உண்மையிலேயே அப்படியான எண்ணம் இருக்கவில்லை. பெண் வேதனை படுவதைப் பொறுக்க முடியவில்லை. பெண்ணை ஆண் அன்பால் ஆழவேண்டும். அதிகாரத்தால் அல்ல. அதிகாரத்தால் ஆழும் ஆண்களைக் கண்டால் எனக்கு உச்சி ஈறாக கோபம் வழிகிறது. இந்தக் கோபம் தப்பான கோபம் இல்லையே. அந்தப் பிஞ்சுப் பெண்ணை அந்தப் பாடுபடுத்த வேண்டியதில்லையே?

சரி சரி அவளுடைய பிரச்சனைய எண்ணிக் கொண்டு இருந்தால் பிரச்சனை தீர்ந்து விடப்போவதில்லை. எனது மனதை நான் திருப்பி வேறு எதிலாவது லயிக்க விட முயற்சித்தேன். நாய்வாலை நிமிர்த்த முடிவதில்லை. எனது மனமும் அவர்களையே சுற்றி அலைந்தது.

தனு என்ன வார்த்தையெல்லாம் கூறினான். நினைக்க மனம் மீண்டும் கொதித்தது. திமிர் எடுத்து அலைவதாக கூறினானே ? என்ன அபத்தமான வார்த்தைகள். நான் திமிர் எடுத்து அலைந்தால் அதைத் தீர்த்துக் கொள்ள முடியாதோ? அப்படி நான் என்திமிரைத் தீர்த்துக் கொண்டு ஒரு ஆண்துணையோடு இருந்தால் இவன் இப்படி யெல்லாம் கதைத்திருப்பானா ? கதைக்கத் துணிவுதான் வந்திருக்குமா?

பெண் ஆண்துணையைத் தேடுவது ஒன்றும் தப்பில்லை. விசு என்னை நேசித்தார். அவரை நான் நேசித்தேன். நான் இறந்திருந்தால் அவர் மறுமணம் செய்திருக்க வேண்டும். அதைப்போல் நான் மறுமணம் செய்ய வேண்டும். யார் இழப்பிற்காகவும் இந்த உலகம் இயங்காமல் இருந்து விடுவதில்லை. அவர் இழந்தார் என்பதற்காக நானோ நான் இறந்தால் அவரோ தவிப்பது அர்த்தமற்றது. நாம் தியாகம் செய்வதாய் உலகிற்குச் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறுவதோடு தேவையில்லாத வேதனைகளை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொள்கிறோம்.

அப்படி என்றால் நான் ஏன் இப்படி இருக்க வேண்டும்? நான் மறுமணம் செய்து கொண்டால் என்ன? யாருக்காகவும் , இந்தஉலகமோ எமதுவாழ்கையே தங்கிவிடுவதில்லை. இதுதான் யதார்த்தம். அப்படி என்றால் ஏன் நான் எனது வாழ்கையை அதன் இன்பத்தை நுகராமல் விடவேண்டும்? நுகரலாம் . ஒருவனை மறுமணம் செய்து கொள்ளலாம். அவன் என்னை விரும்புவான். எனக்கு இன்பம் தருவான். உடல் பசியைத் தீர்ப்பான். அதனால் உள்ளமும் அமைதி பெறும். தேகச் சூடடங்கி நிம்மதி ஏற்படும். யன்னலில் நின்று ஏங்குவதில் இருந்து விடுதலை கிடைக்கும். தலையணையே தலைவிதி என்பதை தவிர்த்துக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

நுார்டிஸ்க் நிர்வாக சேவை பற்றிய
உங்கள் கேள்விகட்கு இதோ ஒரு
இலவச சேவை :

# ஹலோ
# நுார்டன்!

நுார்டிஸ்க் நாடுகளிடையே
பிரயாணம் செய்யும்,
இடம்பெயரும் சகலருக்கும்,
நுார்டிஸ்க் நிர்வாகசேவையுள்
சிக்கியுள்ளோர்க்கும் பதில்
அளிக்கும் சேவை.
தொலைபேசி(மொபில் அல்ல),
ஃபக்ஸ் அல்லது மின்னஞ்சல்
மூலம் நீங்கள் சரியானவழியை
அறிந்துகொள்ளலாம்.
உதாரணமாக பின்வரும்
சாதாரண பிரச்சனைகளான:
-கல்விக்கடன் அல்லது
பரீட்சை செல்லுபடி
-மருத்துவபணம் அல்லது
ஓய்வூதியம்
-நியமனம் அல்லது
மொழிபெயர்ப்பு உதவி
-சுங்கவரி அல்லது தீர்வை
இது மிக இலகுவானது:
00 800 1111 8888 எனும்
தொலைபேசிஇலக்கத்தினை
அழைக்க! அல்லது அதே
இலக்கத்துக்கு தொலைநகல்
அனுப்புக! அல்லது மின்னஞ்சல்
அனுப்புக:hallo @ norden.se
உங்கள் பிரச்சனைபற்றி
கூறுக,48மணி நேரத்தில் பதில்
உங்கட்கு கிடைக்கும்!
நுார்டிஸ்க் அமைச்சரவை

**En gratistjeneste for deg som har spørsmål om det nordiske byråkratiet:**

# "Hallå Norden"

gir svar til alle som reiser eller flytter mellom de nordiske land og som har satt seg fast i det nordiske byrå-kratiet. På telefon (ikke mobil), faks eller e-post kan du gratis bli loset på rett vei.

**Vanlige problemer er for eksempel knyttet til:**

- studielån eller eksamensgyldighet
- sykepenger eller pensjon
- ansettelser eller tolkehjelp
- toll eller avgifter

**Så enkelt er det:**
Ring 00 800 1111 8888, faks det samme nummeret eller bruk e-post: hallo@norden.se
Fortell om ditt problem, og du får svar i løpet av 48 timer.

**Nordisk Ministerråd**

Innrykket av Statens informasjonstjeneste A-26/98

Sarvadesa Tamiler er utgitt av støtte fra Kulturdepartementet,og
Utenriksdepartementet i 1998 (Tema:Om harmonisk verden-Før,nå,framtiden)

www.tamilarangam.net

# கடனை வாங்காதீர்!


## பாவித்தகார் வாங்க முன்பு அசையும்சாதன பதிவில் விசாரிக்கவும்.

நீங்கள் வாங்கவுள்ள கார் மீது கடன் உண்டா? என
இன்ரநெற்றில் ஆராயலாம்.
இந்தச்சேவை இலவசம்,
இன்ரநெற்றின் புறொநொய்சுண்ட் வலையில் பார்க்கலாம்:

**http://www.brreg.no/**

இன்ரநெற் வசதி உங்களிடம் இல்லையாயின், தொலைபேசி:
75 00 75 00 மூலம்
நீங்கள் தகவல்களைப்பெறலாம்.

**-புரோநொய்சுண்ட் பதிவுகள்-**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**C-BLAD** **Redaktør:**
**SARVADESA TAMILER** **N.S.Pirabu**,B.Sc.,Dip.Jour.U.K
**Etbl.1994** **L.Hervigsv.69A**
**Abonnement:90-kr/år Giro:05320899453** **3035 Drammen,Norway**
**Norges Tamilskblad for informasjon,kunnskap,kultur, fred,framgang og solidaritet! Vol.5 Nr.7**

17. utgave

# Brosjyreoversikten 1998-99

Med undervisningsmateriell!


Katalogen omtaler ca. 1900 brosjyrer utgitt av offentlige etater og en del organisasjoner. Svært mange brosjyrer egner seg som supplement til lærebøkene, og de fleste brosjyrene er dessuten gratis!

**I Brosjyreoversikten finner du brosjyrer under mange ulike emner/stikkord:**
næringsliv, landbruk og fiske, kommunikasjon/samferdsel, offentlig forvaltning, innvandrere og flyktninger, utviklingshjelp, utdanning, arbeid, ferie og fritid, natur og miljø, familie, barn, likestilling, eldre, funksjonshemmede, mat og ernæring, forsvar og fredsarbeid, forbrukerspørsmål, helse og sikkerhet, rusmidler, trygd, statistikk, bygg og bolig, publikasjonslister, livssynsspørsmål, ungdom, samfunnsorientering, pedagogikk og psykologi, språk og kultur.

**Brosjyreoversikten er gratis, og bestilling kan sendes som:**

- Brev: Opplysningstjenesten i staten, Postboks 8117 Dep, 0032 OSLO
- Telefaks: 22 24 95 19
- E-post: opplys@si.dep.telemax.no

- En katalog som viser veien til mange brosjyrer




Opplysningstjenesten
**Statens Informasjonstjeneste**

Innrykket av Statens informasjonstjeneste A-23/98

17வது வெளியீடு

# துண்டுப்பிரசுரங்கள் பற்றிய தொகுப்பு 1998-99

## கற்பிப்பு விடயங்களும் உண்டு!

பொதுத்துறையினர், சிலஅமைப்புகள் வெளியிட்ட 1900 துண்டுப்பிரசுரங்கள் பற்றி இத்தொகுப்பு கூறுகிறது. மிக அதிகமான துண்டுப்பிரசுரங்கள் பாடப்புத்தகங்கட்கு துணைநூல்களாக அமை வதுடன், அனேகமானவை இலவசமாக வழங்கப் படுகின்றன.

**இத்துண்டுப்பிரசுரத் தொகுப்பில் நீங்கள் பல்வேறு தலைப்பில், குறிப்புச்சொற்களில் துண்டுப்பிர சுரங்களை காண்பீர்கள்:**

வர்த்தகம், விவசாயம்-மீன்பிடி, தகவல்தொடர்பு-போக்குவரத்து, பொதுமுகாமை, குடியேறியோர்-அகதிகள், அபிவிருத்திஉதவி, கல்வி, தொழில், விடுமுறை-ஓய்வுநேரம், இயற்கையும்-சூழலும், குடும்பம், குழந்தை, சமஉரிமை, முதியோர், தொழிற்பாடுகுறைந்தோர், உணவு-போசாக்கு, பாதுகாப்பு-சமாதானநடவடிக்கை, நுகர்வோர்பிரச்சனை, சுகாதாரம்-பாதுகாப்பு, போதைப்பொருள், காப்புறுதி, புள்ளிவிபரம், கட்டிடம்-வீடு, வெளியீட்டுஅட்டவணைகள், வாழ்வியல் நோக்கு கேள்விகள், இளைஞர், சமூகவிளக்கம், கல்வியும்-உளவியலும், மொழி-கலாசாரம்.

**துண்டுப்பிரசுரங்கள் தொகுப்பு இலவசம்!**

**பெறவிரும்பின் தொடர்புறுக:**

கடிதமூலம்: அரச தகவல் சேவை, த.பெ.8117 டெப், 0032 ஒஸ்லோ
தொலைநகல்: 22 24 95 19
மின்னஞ்சல் : Opplys@si.dep.telemax.no

-பலதுண்டுப்பிரசுரங்கட்கு வழிகாட்டும் ஒரு தொகுப்பே இது!

தகவல்சேவை. **அரசதகவல்சேவை**

-அரச தகவல்சேவையால் வழங்கப்பட்டது அ23-98

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்